விலை ரூபா: 5.00 பக்கங்கள்:-பத்து Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
# VALAMPURI

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 ஐப்பசி05 செவ்வாய்க்கிழமை (22.10.2002) தொலைபேசி~ 2223378 ஒலி 307

நந்தா
புடைவையகம் அன் பான்சி ஹவுஸ்
* ரெடிமேட் ஆடைகள் * ஸ்கேட் அன் பிளவுஸ் * சல்வார் கமிஸ் * நவீன டிசைன்களில் பலரக சாறிகள்
* ஜீன்ஸ் துணிகள் * அழகு சாதனப் பொருட்கள்
போன்றவற்றை பெற்றுக் கொள்ளலாம்.
யாழ்வீதி, மானிப்பாய்

# பொதுத் தேர்தல் நடைபெற்றால் அது சமாதான முயற்சியைக் குழப்பிவிடும்!

## பிரதமர் ரணில் கருதுவதாக அரசியல் வட்டாரங்கள் தகவல்

(கொழும்பு)

பாராளுமன்றத்தை ஜனாதிபதி நினைத்த வேளையில் கலைத்து விடுவதை தடுக்கும் 19வது திருத்தச்சட்டீ மூலம் உச்ச நீதிமன்றத் தீர்ப்பு ஒன்றினால் நிராகரிக்கப்பட்ட நிலையில் இது தொடர்பாக எதிர் காலத்தில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக இந்த வாரம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா அறிவித்தல் விடுவாரென எதிர்பார்க்கப்படுகிறது. ஜனாதிபதியுடன் மோதல் போக்கைக் கடைப் பிடித்து வரும் அமைச்சர்கள் மற்றும் பொதுத் தேர்தல் வைக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கும் விடாப் பிடியாளர்களை சந்திப்பதை பிரதமர் தவிர்த்து வருகிறார் என்றும் பிரதமருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பொதுத் தேர்தல் நடத்துவது ஒரு மாற்று யோசனை தான் ஆனாலும் அது சமாதான முன்னெடுப்புக்களை குழப்பிவிடலாம் என்று அவர் தெரிவித்துள்ளதாகவும் ஜனாதிபதிக்கான நிதிகளை வெட்டிக் குறைக்கும் நடவடிக்கைகளை மறுத்துள்ளதாகவும் பிரதமருடன் நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை இப்பொழுது பாராளுமன்றப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வரும் முஸ்லிம் காங்கிரஸ் எம்.பிக்களை வசப்படுத்தும் முயற்சியில் பொ.ஐ.மு ஈடுபட்டிருக்கிறது உத்தியோகபூர்வமான பேச்சுக்கள் நடைபெறவில்லையாயினும் சம்பிரதாயமற்ற வகையில் பேசி வருகிறோம். கிழக்கு மாகாண முஸ்லிம்கள் தொடர்பாக முஸ்லிம் காங்கிரசும் நாமும் ஒரே கொள்கையைக் கொண்டிருக்கிறோம் என்று பொ.ஐ.மு பேச்சாளர் சரத்அமுனுகம தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சி கொறடா மங்கள

(10ம் பக்கம் பார்க்க)

# நோர்வே அமைச்சர் ஹெலக்கீசன் பிரதமர் ரணிலுடன் நேற்று பேச்சு



## தாய்லாந்துப் பேச்சுக் குறித்து ஆராய்வு

(நமது நிருபர்)

**தாய்லாந்தில் இம் மாதம் 31ம் திகதி ஆரம்பமாகவுள்ள 2ம் கட்ட சமாதானப் பேச்சுக்குறித்த முக்கிய விடயங்கள் தொடர்பாக நோர்வேயின பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீசன் தலைமையிலான விசேட தூதுக்குழுவினர் நேற்றிரவு அலரி மாளிகையில் பிரதமர் ரணில விக்கிரமசிங்காவைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.**

கடந்த மாதம் தாய்லாந்தில் இடம்பெற்ற முதற் கட்ட சமாதானப் பேச்சுவார்த்தையை அடுத்து சுமார் ஒரு மாத கால இடைவெளிக்கு பின் நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் தலைமையிலான விசேட தூதுக்குழுவினர் நேற்றுக் காலை அமைச்சர் ஜி.எல். பீரிஸ், சமாதானச் செயலணித் தலைவர் பேணாட் குணத்திலக ஆகியோரை தனித்தனியே சந்தித்துப் பேச்சு வார்த்தை நடத்தியுள்ளனர்.

இப் பேச்சுவார்த்தையின் போது முதற் கட்டப்பேச்சுவார்த்தை முடிவில இணக்கம் காணப்பட்ட விடயங்கள் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், எடுக்கப்பட வேண்டிய

(10ம் பக்கம் பார்க்க)



கோலாகலமாக நடைபெற்று வரும்

தனிஅலகுக்கு பிரதமர் உறுதி தரும் வரை



(நமது நிருபர்).

**தாய்லாந்தில் இம் மாதம் 31ம் திகதி ஆரம்பமாகவுள்ள 2ம் கட்ட சமாதானப் பேச்சுக்குறித்த முக்கிய விடயங்கள் தொடர்பாக நோர்வேயின பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீசன் தலைமையிலான விசேட தூதுக்குழுவினர் நேற்றிரவு அலரி மாளிகையில் பிரதமர் ரணில விக்கிரமசிங்காவைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.**

கடந்த மாதம் தாய்லாந்தில் இடம்பெற்ற முதற் கட்ட சமாதானப் பேச்சுவார்த்தையை அடுத்து சுமார் ஒரு மாத கால இடைவெளிக்கு பின் நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் தலைமையிலான விசேட தூதுக்குழுவினர் நேற்றுக் காலை அமைச்சர் ஜி.எல். பீரிஸ், சமாதானச் செயலணித் தலைவர் பேணாட் குணத்திலக ஆகியோரை தனித்தனியே சந்தித்துப் பேச்சு வார்த்தை நடத்தியுள்ளனர்.

இப் பேச்சுவார்த்தையின் போது முதற் கட்டப்பேச்சுவார்த்தை முடிவில இணக்கம் காணப்பட்ட விடயங்கள் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், எடுக்கப்பட வேண்டிய

(10ம் பக்கம் பார்க்க)



### கோலாகலமாக நடைபெற்று வரும்

# மானுடத்தின் தமிழ்க் கூடல் - 2002 இறுதிநாள் நிகழ்வுகள் இன்று

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகள் கலைபண்பாட்டுக் கழகம் நிதர்சனம் நிறுவனத்துடனும், தமிழ்த்தாய் வெளியீட்டகத்துடனும் இணைந்து நடாத்தும் ''மானுடத்தின் தமிழ்க் கூடல்'' நிகழ்வின் இறுதிநாள் நிகழ்ச்சிகள் இன்று வெகுவிமர்சையாக இடம் பெறவுள்ளது.

தமிழுக்கு மகுடம் சூட்டும் வகையில் தமிழ்க்கலை இலக்கிய நிகழ்வாக கடந்த மூன்று தினங்கள் நடை பெற்ற மானுடத்தின் தமிழ்க் கூடல் நிகழ்வில் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபம் புதுப் பொலிவு பெற்று விளங்குகிறது.

தமிழர் தாயகப் பிரதேச அறிஞர்கள்,தென்னிலங்கை அறிஞர்கள், தென்னிந்திய பேராளர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் எனப் பெருந்திரளான அறிஞர் பெருமக்களால் அரங்கு நிறைந்திருக்கின்றது.

நிகழ்வுகள் தினமும் முற்பகல்

(10ம் பக்கம் பார்க்க)

# தனிஅலகுக்கு பிரதமர் உறுதி தரும் வரை பாராளுமன்றைப் பகிஷ்கரிப்போம்

### அமைச்சர் அதாவுல்ல தெரிவிப்பு

(கொழும்பு)

பகிஷ்கரிப்பில் ஈடுபட்டிருக்கும் எம்.பிக்களில் பலர் மீண்டும் தமது பழைய நிலைப்பாட்டிற்கு வந்துள்ளனர் என்று முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் கூறியிருந்த போதிலும், பகிஷ்கரிப்புக் குழுவின்ரின் தலைமையிலுள்ள அம்பாறை மாவட்ட எம்.பி ஏ.எல். எம்.அதாவுல்லா அதனை மறுத்துள்ளார். இணைக்கப்பட்ட வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு இடைக் கால நிர்வாகம் வழங்கப்படும் பட்சத்தில் முஸ்லிம் மக்களுக்கு தனியான நிர்வாக அலகு உருவாக்கப்படும் என்ற உறுதி மொழியை பிரதமர் தரும் வரையில் பகிஷ்கரிப்புத் தொடரும் என்று அவர் தெரிவித்துளளார்.

இது தொடர்பாக அதாவுல்லா கருத்துத் தெரிவிக்கையில், முஸ்லிம காங்கிரஸில் இன்றுள்ள நிலைமை தொடர்பாக ஆலோசிப்பதற்கென

(10ம் பக்கம் பார்க்க)

# யுத்தத்தால் ஏற்பட்ட அனர்த்தங்களுக்கு ஆட்சியாளர்களே பொறுப்பேற்க வேண்டும்

### சிங்களப் பேராசிரியர் சுனில் ஆரியரத்தின உரை

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் இதுவரை காலமும் நடைபெற்ற யுத்தத்தினது பாதிப்புக்களுக்கும், அதனால் ஏற்பட்ட அனர்த்தங்களுக்கும் உரிய பொறுப்பை அக்காலகட்டத்தில் ஆட்சி செய்த அரசியல் வாதிகளே பொறுப்பேற்க வேண்டும்.

இவ்வாறு தென்னிலங்கையைச் சேர்ந்த சிங்களப் பேராசிரியர் சுனில ஆரியரத்தின தெரிவித்தார்.

மானுடத்தின் தமிழ்க் கூடல் மூன்றாம் நாள் நிகழ்வான நேற்று ''சிங்கள தமிழ் முரண்பாடுகளின் வெளிப்பாடு'' என்ற தலைப்பில் உரையாற்றும் போதே பேராசிரியர் சுனில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சிங்கள மொழியில் உரை நிகழ்த்திய அவர் மேலும் பேசுகையில்- ஆண்டாண்டு காலமாக சிங்கள

(10ம் பக்கம் பார்க்க)

உள்ளே மாதிரி வினாத்தாள் விஞ்ஞானம் ⇨

### 19வது திருத்தச் சட்ட மூலம்

# உயர் நிதிமன்றத் தீர்ப்பை சபாநாயகர் இன்று அறிவிப்பார்

(கொழும்பு)

19வது அரசியலமைப்புச் சீர்திருத்த சட்டமூலம் தொடர்பாக உயர் நீதிமன்ம் அறிவித்த தீர்ப்பு விவகாரம் இன்று பாராளுமன்ற சபா நாயகர் ஜோசப் மைக்கல் பெரேராவினால் உத்தியோக பூர்வமாக அறிவிக்கப் படவுள்ளது.

இதனை அடுத்து எழக்கூடிய அரசியல் நிலைவரம் தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எதிர்வரும் வியாழக்கிழமை இரவு தனியார் தொலைக் காட்சி மூலம் நாட்டு மக்களுக்கு உரையாற்றவுள்ளார்.

ஜனாதிபதி தொலைக்காட்சி மூலம் உரையாற்ற முன்னதாக பொது ஜன ஐக்கிய முன்னணி உறுப்பினர்களுக்கு உயர் நீதிமன்றத் தீர்ப்பை அடுத்து நாட்டில் எழுந்துள்ள

(10ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சிறு விளம்பரம்

**கடை வாடகைக்கு**

இல: 172 (254 K K S வீதியில அமைத்துள்ள மாடிக் கடை வாடகைக்கு விடப்படும் தொடர்புகளுக்கு அ. அலெக்ஸீஸ் ஓய்வு பெற்ற கிராமசேவையாளர் சமாதான நீதிவான் இல: 18, புதுமை மாதா கோவில் கிழக்கு வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 021-2223358 (6123)

## பயிர்செய் நிலங்களில் பன்றித் தொல்லை

(கோப்பாய்)

இருபாலை கும்பப்பிரளப பகுதியில் பன்றிகளின் தொல்லை நளுக்கு நாள் அதிகரித்து வருவதாக கூறப்படுகிறது

இதனால் மரவள்ளி, குரக்கன் பயிர்ச் செய்கை பாதிக்கப்பட்டு வருவதாக விவசாயிகள் தரப்பில் கவலை தெரிவிக்கப்படுகின்றது

கால போக நெற் செய்கையும் பன்றிகளால் பாதிப்புக்குள்ளாகலாம் என விவசாயிகள் தரப்பில் அச்சம் நிலவுகின்றது (உ-79)

## இரராசி பலன்

22 10 2002
(ஐப்பசி 5 செவ்வாய்)
பிரதமை பி ப 3 20 வரை
அச்சுவினி மு. ப 8 51 வரை
ராகுகாலம் 3 02 - 4.32
நல்லநேரம் 10 32 - 12 02
அமிர்தசித்தம்

**மேடம்**
சென்ற இடத்தில் வரவேற்பு, காரிய சாதனை' நல்லமுயற்சி, போசன சுகம்.

**இடபம்**
தேவையற்ற மனஸ்தாபம், முயற்சி தாமதம், சயனசுகக் குறைவு, சுப செலவு.

**மிதுனம்**
குடும்பத்தில் நல்லகாரியம் செய்தொழில் லாபம், கௌரவம், மனமகிழ்ச்சி.

**கடகம்**
அதிகபிரயாசை, வியாபார நன்மை, தூரதேசச் செய்தி, முயற்சி கைகூடும்

**சிங்கம்**
மனப்பதற்றம், தந்தை வழி உறவு, புதிய சிந்தை, உடல்நலக் குறைவு.

**கன்னி**
நண்பர்கள் பெறுப்பு காரிய இடையூறு, வாகன பயம், போசன சுகம்

**துலாம்**
சுவாரஸ்யம், அபூர்வ சந்திப்பு, குடும்ப சுகம், காரிய ஜெயம்.

**விருச்சிகம்**
சத்துரு ஜெயம், தன வரவு, நல்ல சமபவம், தொழில் விருத்தி

**தனுசு**
அபகீர்த்தி, காரிய இடையூறு, திடீர் நன்மை, பெரியோர் சந்திப்பு

**மகரம்**
நிலைமாற்றம், கல்வியில் ஆர்வம், விரும்பாத உறவு, உடல் சோர்வு.

**கும்பம்**
கூட்டு முயற்சி, இனிய சம்பவம், அன்னியர் சந்திப்பு, பிரயாண நன்மை.

**மீனம்**
வாக்கு கலகம், கௌரவக் குறைவு, உறவினர் சந்திப்பு, காரியதாமதம்.

(பழைய நோர் படிகணிப் பட்டது)

வளவன்

# பெற்றோலிய கூ. தா. ஊழியர் சுயவிருப்பில் ஓய்வு பெறலாம்

(கொழும்பு)

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் கடமையாற்றும் ஊழியர்கள் சுய விருப்பத்தின் பேரில் ஓய்வு பெறுவதற்கு சந்தர்ப்பமளிக்க கூட்டுத் தாபனம் தீர்மானித்துள்ளது.

திறைசேரியுடன் அண்மையில் நடத்திய பேச்சுவார்த்தையினை தொடர்ந்தே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாக கூட்டுத்தாபத்தின் தலைவர் தகாம் விமலசேன தெரிவித்துள்ளார்.

சுய விருப்பின் பேரில் ஓய்வு பெறும் ஊழியர்களின் சேவைக் காலத்தினை கருத்தில் கொண்டு அவர்களுக்கு வருடாந்தம் இருமாதச் சம்பளங்கள் வழங்கப்படும்எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் வெளியிட்டிருக்குச் சுற்றறிக்கையில், நிறைவேற்று அதிகாரி ஒருவருக்கு 6 இலட்சம் ரூபாவும்,

ஊழியர் ஒருவருக்கு அவர் இறுதியாக பெற்ற சம்பளத்தின் அடிப்படையிலும் ஊதியம்கணிப்பிடப்படும.

கூட்டுத்தாபன ஊழியர்கள் சுய விருப்பின் பேரில் ஓய்வு பெறும் திட்ட நடவடிக்கை அடுத்தவருடம்ஜனவரிமாதம் முதல் நடைமுறைக்குவரும் எனவும் அச்சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது (உ-8)

## 6 இலட்சம் மரக்கன்றுகள் நாட்டல்

(கொழும்பு)

தேசிய மரநடுகை தினத்தையொட்டி நாடளாவிய ரீதியில் 6 இலட்சம் மரக்கன்றுகள் நடுகை செய்யப்படவுள்ளன.

தேசிய மரநடுகைதினம் இம்மாதம் 15 ஆம் திகதியிலிருந்து நவம்பர் 15ஆம் திகதி வரை இடம்பெற்று வருகின்றது.

(உ-8)

## 18,19வது திருத்தசட்டங்கள் உயர் நீதிமன்ற தீர்ப்பு இன்று அறிவிக்கப்படும்

(கொழும்பு)

18,19 வது அரசமைப்புதிருத்தச் சட்டங்கள்தொடர்பான உயர்நீதிமன்ற தீர்ப்புகள் இன்று சபாநாயகரினால் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும்என எதிர்பார்க்கப்படுகிறது.

சபாநாயகரின் இந்த அறிவித்தல் எப்படிஅமைந்தாலும் அதனை சிரம்தாழ்த்தி ஏற்றுக்கொள்வோம் என்றும் நீதிசட்ட மறுசீரமைப்பு விவகாரஅமைச்சர் டபிள்யூ ஜே. எம். லொக்கு பண்டார கூறியுள்ளார்.

மேலும் அவர் இதுகுறித்து கருத்துக் கூறுகையில் நாம் சட்டத்தை மதிப்பவர்கள் அதேவேளை, மக்கள் எமக்கு அளித்த ஆணையையும் நிறைவேற்றக் கடமைப்பட்டுள்ளோம். நாம் மக்களிற்கு கொடுத்தவாக்கை நிறைவேற்ற சகல முயற்சிகளையும் மேற்கொள்வோம.

மாறாக எமது முயற்சிகளைக் கைவிட்டுவிட மாட்டோம்என்று உறுதியாக கூறியுள்ளார்.

இதேவேளை உயர்நீதிமன்றத்தின் தீர்ப்புக்கள் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படுவதற்குமுன்னரே பல்வேறு ஊகங்கள் வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதியின் அதிகாரங்களைக்குறைக்க மூன்றில் இரண்டு பெரும்பான்மையினர் வாக்குகளைப் பெறுவதுடன் சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றின்மூலம் அதனை ஊர்ஜிதப்படுத்த வேண்டும்.

அல்லது ஜனாதிபதியின் ஆலோசனையைபெற்று அவரின் இணக்கப்பாட்டுடன் 2/3 பங்குகொண்ட பெரும்பான்மையுடன் சட்டதிருத்தங்கள் நாடாளுமன்றத்தின் மூலம்நிறைவேற்றப்படலாம்.

இதேபோலவே நாடாளுமன்ற உறுப்பினர்கள் தன்னிச்சையாக வாக்களிக்கும் உரிமை தொடர்பாகவும் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடனும் சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றை நடத்துவதுமூலம் மட்டுமே தீர்மானிக்கப்பட வேண்டும்என உயர்நீதிமன்றத்தீர்ப்பில் கூறப்பட்டிருப்பதாகவும் அனுமானங்கள் கூறுகின்றன.

அதேவேளை, ஐ. தே. கட்சித்தலைவர் மலிக்சமரவிக்ரம ஜனாதிபதியுடன் சமரசம் என்ற பேச்சிற்கே இடம் இல்லைஎனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தேர்தலிற்கு தம்மை தயாராகும் படி தமது கட்சி அமைப்பாளர்களிடம் கூறியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இவை இவ்வாறிருக்க எதிர்கட்சிகள் மாற்று அரசுஒன்றை அமைக்கும்முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

(உ-10)

## அமைச்சர் சந்திரசேகரன் பாலாவை இன்று சந்திப்பு

(கிளிநொச்சி)

விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன்பாலசிங்கத்தை பொது வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் பி சந்திரசேகரன் இன்று வன்னியில் சந்தித்துப் பேசவுள்ளார்.

எதிர்வரும் 31 ஆம் திகதி தாய்லாந்தில் ஆரம்பமாகவுள்ள இரண்டாம சுற்றுப் பேச்சுக்களில் மலையகத் தமிழர்கள் தொடர்பாக பேசப்பட வேண்டிய விடயங்கள் குறித்து கலந்துரையாடும் வகையில் இச் சந்திப்பு அமைகிறது.

இச் சந்திப்பை முடித்துக் கொண்டு அமைச்சர் பி. சந்திரசேகரன் வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றுவரும் ''மானுடத்தின் தமிழ்க் கூடல் 2002'' இறுதி நாள் நிகழ்வில் கலந்துகொள்வார் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. (உ)

## எல்லை தமிழ் கிராமங்களில் பொலிஸார் அட்டகாசம்

(பொலநறுவை)

பொலநறுவை மாவட்டத்தின் எல்லைப் பிரதேசமான முத்துக்கல், கறப்பளை ஆகிய இடங்களில் வாழும் தமிழ் மக்கள் மீது பொலிஸார் அட்டகாசம் புரிந்துவருவதாக கூறப்படுகின்றன;

சுமார் 800 குடும்பங்கள் இவ் இடங்களில் வசித்து வருகின்றனர் தமக்குதேவையான பொருட்களை வாங்கி வரும்படி பொலிஸார் இப் பொது மக்களை அச்சுறுத்திவருவதாகவும்,

அவ்வாறு பொருட்களை வாங்கிக் கொடுக்காத பட்சத்தில் இரவு வேளையில் அவர்களின் வீடுகளிற்கு சென்று அச்சுறுத்தல்விடுத்து வருவதாகவும் கூறப்படுகின்றது;

அத்துடன், புலிகளிற்கு ஆதரவு வழங்குவதாக தெரிவித்தும் அக்கிராம மக்களை துன்புறுத்தி வருவதாக தெரிவிக்கப்படுகிறது;

இதேவேளை, புரிந்துணர்வு உடன்பாடு ஏற்பட்டதன் பின்னர் படையினர் மற்றும் பொலிஸார் வட-கிழக்குப் பொது மக்களுடன் நல்லுறவைப் பேண முயன்றுவருவது குறிப்பிடத்தக்கது; (உ-10)

## வாக்களித்த மக்களை அரசு ஏமாற்றிவிட்டது தினேஷ் குணவர்த்தனா

(கொழும்பு)

வடக்கையும் கிழக்கையும் மலையகத்தையும் கூறு போட்டால் இலங்கையில் மிஞ்சுவது என்ன?

மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவர் தினேஷ் குணவர்த்தன இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார்.

கட்சியின் கண்டிமாவட்ட பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்;

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்;

நாட்டின் வர்த்தகத்துறை முதல் அனைத்தையும் ஏலம் போடுவது தான் ஐக்கிய தேசிய முன்னணி அரசின் கொள்கையாக உள்ளது.

23 தனியார் வங்கிகள் போட்டி போட்டுக்கொண்டு முயன்றும் வீழ்த்த முடியாத மக்கள் வங்கியையும் இலங்கை வங்கியையும் தனியார் மயப்படுத்தி அதில் கிடைக்கும் இலாபத்தை இல்லாமல் செய்ய அரசு முயல்கிறது.

நாட்டின் பல அழிவுகளுக்கு காரணமாக இருந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தை பாதுகாப்பாக எமது விமானத்தளத்தின் ஊடாக ஹெலிமூலம் வன்னிக்கு அனுப்பிவைத்துள்ளமை வெட்கக்கேடான ஒரு செயலாகும்.

ஐக்கிய தேசிய முன்னணி அரசை நம்பி வாக்களித்த மக்கள் பெரும் ஏமாற்றத்துக்கு உள்ளாகியுள்ளார்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார் (உ-8)

## அ. இ. பொ. ஊழியர் முன்னணி தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்கக் கோரிக்கை

(கொழும்பு)

'பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைத்திருக்கும் தமிழ் அரசியல் கைதிகளை தீபாவளியன்றாவது விடுதலை செய்யுங்கள்;

அகில இலங்கை பொது ஊழியர் முன்னணி ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்காவுக்கு அனுப்பிவைத்துள்ள மகஜரில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அம் மகஜரில் மேலும்குறிப்பிட்டிருப்பதாவது;

நாட்டின் எத்தனையோ பிழைகள் செய்தவர்கள் விடுதலையான போதும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட 150க்கும் மேற்பட்ட தமிழ் இளைஞர்கள் விசாரணைகள்இன்றி சிறைகளில் வாடுகின்றனர்.

இவர்களைவிடுதலை செய்யும அதிகாரம் உங்களுக்கு உண்டு ஆகையால் ஏற்கனவே தங்களை நம்பி வாக்களித்த மக்களுக்கு உருப்படியானகாரியம் எதுவும் செய்யவிரும்பின் எதிர்வரும் தீபாவளியன்று கைதிகளை விடுதலை செய்யுங்கள் என அதில் கோரப்பட்டுள்ளது. (உ-8)

## காஞ்சிரங்குடா சம்பவம் பொதுமக்கள் வாக்குமூலம்

அம்பாறை காஞ்சிரங்குடா விசேடஅதிரடிப்படை முகாம் முன்பான தாக்குதல் தொடர்பாக நேற்று பொதுமக்களின் வாக்கு மூலங்கள் பெறப்பட்டன.

இத்தாக்குதல் தொடர்பாக உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்காவினால் நியமிக்கப்பட்ட மூவர் கொண்டகுழு நேற்று திருக்கோவில் பிரதேச செயலகத்தில் வைத்து இவ் வாக்கு மூலங்களை பெற்றுக் கொண்டது.

இக்குழுவினர் பொதுமக்களின் வாக்குமூலங்களை இன்னமும் பெற்றுக்கொள்ளவுள்ளனர்.

கடந்த 9 ஆம் திகதி நடைபெற்ற இத்தாக்குதலின் போது 7 பொதுமக்கள் பலியானதுடன், 20 க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தமை தெரிந்ததே. (உ-8)

## ஐந்து மாவட்டங்களில் உயர் கல்வி நிலையங்கள்

(கொழும்பு)

தகவல் தொழில்நுட்பத்துக்கான நவீன பாட நெறியை உள்ளடக்கியஉயர்கல்வி நிலையங்கள் 5 மாவட்டங்களில் தலா 1 என்ற ரீதியில் நிறுவப்படவுள்ளதாக மூன்றாம் நிலைக் கல்வியமைச்சர் கபீர் ஹசீம்தெரிவித்துள்ளார்.

இக் கல்வி நிலையங்களை நிறுவுவதற்கு உலகவங்கி 40 மில்லியன் டொலர் களை வழங்கியுள்ளது.

மட்டக்களப்பு, காலி, கேகாலை, கொழும்பு, மாத்தறை மாவட்டங்களிலேயே இக்கல்வி நிலையங்கள் நிறுவப்படவுள்ளன. (உ-8)

## நெற்செய்கை

இராணுவ நடவடிக்கைகள் காரணமாக கடந்த10வருடங்களுக்கும் மேலாக தரிசாகக் கிடந்த பூநகரிப் பகுதிவயல் நிலங்களில் இவ்வருடம் நெற் செய்கை பண்ணப்படுகிறது.

கறுக்காய்தீவு, ஞானிமடம், செட்டிக் குறிச்சி மட்டுவில் நாடு ஆகிய பகுதிகளிலேயே நெற் செய்கை இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது. (உ-225)

## கடையில் திருட்டு

மீசாலை பழைய ஸ்ரேசன் சந்தியில் அமைந்துள்ள பல சரக்குக் கடை ஒன்றில் அண்மையில் திருட்டு இடம்பெற்றுள்ளது.

வே. கிருஷ்ணராஜா என்பவருக்குச்சொந்தமான பலசரக்குக் கடையிலேயே 50 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்கள் களவாடப்பட்டுள்ளன.

(உ-41)

# எவரது கட்டுப்பாடும் இல்லாத காரணத்தால்

# கஜுர்ணாக் கடற்கரையில் கலாசாரச்சீரழிவு

யாழ். குடாநாட்டின் சப்த தீவுகளில் ஒன்றாகிய காரைநகரின் அழகுக்கு அழகு சேர்க்கும் அம்சங்களில் கஜுர்ணாக் கடற்கரையும் ஒன்றாகும். இக் கடற்கரையில் அழகுற நிழல்பரப்பும் சவுக்கம் மரங்களும், எல்லையற்றுக்கிடக்கும் கடற்பரப்பும், எந்நேரமும் குளு குளு என வீசும் கடற்காற்றும், கடற்கரை மணலும், இயற்கையான அழகாகச்சிறப்புற்று உல்லாசப் பயணிகளை கவருகின்றன. இக் கடற்கரையின் அழகினையும், முக்கியத்துவத்தினையும் உணர்ந்ததென் இந்திய திரைப்பட இயக்குநர்கள் 'பயிலட் பிரேம்நாத்' படத்தில் நடிகர் திலகம் சிவாஜி கணேசனும் மாலினி பொன்சேகாவும் இணைந்து நடித்த பாடற்காட்சியை இக்கடற்கரையிலேயே படமாக்கியமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறு புகழ்பெற்ற கஜுர்ணா கடற்கரை இன்று எவரது கட்டுப்பாடுகளும் இன்றி தமிழ் கலாசாரத்திற்கே களங்கம் ஏற்படுத்தும் வகையில் செல்வது மன வேதனைக்குரியதாகும்.

### புனிதப் பிரதேசம்

கஜுர்ணாக் கடற்கரையானது ஈழத்துச் சிதம்பர ஆலயத்தின் புண்ணிய தீர்த்த மூமாகும். பங்குனி உத்தரத்தினை தீர்த்க நாளாகக் கொண்டு தீர்த்தோற்சவத்திற்காக எம்பெருமான் இக் கடற்கரைக்கு எழுந்தருழுவது குறிப்பிடத்தக்கதாகும். இக் கடற்கரைப் பிரதேசம் புனிதமாக்கப்படவேண்டிய தொன்றாகும். இச் செயற்பாட்டினை ஈழத்துச்சிதம்பர ஆலயம் மேற்கொள்ளலாம். அல்லது இந்துகலாசார அமைச்சின்கீழ் நடைமுறைப்படுத்த வேண்டும். எப்படியாவது புனிதப் பிரதேசமாக பிரகடனப்படுத்துவதே முக்கியமானதாகும்.

### உல்லாசப் பயணிகளைக் கவர்ந்த பிரதேசம்

பல தசாப்தங்களிற்கு முன்பே இக் கடற்கரை இயற்கை அழகினை உடையதாய்உல்லாசப் பயணிகளைக் கவர்ந்தது. இங்கு யாழ் குடா நாட்டு உல்லாச பயணிகள் மட்டுமல்லாது, தென்னிலங்கை உல்லாசப்பயணிகள், மேலைநாட்டு உல்லாசப் பயணிகளும்வந்துபோகின்றனர். இவ்வாறுபல்லின, பலமத பலமொழிபல கலாசாரத்தினை உடைய உல்லாசப்பயணிகள் ஒரேசமயத்தில் ஓரிடத்தில் கூடுகின்ற நிலைமை ஏற்படுகிறது, மேலை நாட்டு உல்லாசப்பயணிகளின் கலாசாரம் எமது நாட்டின் பண்பாட்டு விழுமியங்களுக்கும், கலாசாரத்திற்கும் ஒவ்வாத செயற்பாடாகக் காணப்படுகின்றது. அதனால் இது ஒரு கலாசார சீரழிவு எனப்படுகின்றது.

ஆனால் அந்தந்த நாட்டின் கலாசார சமூக விழுமியங்களை அந்தந்த நாட்டு உல்லாசப்பயணிகள் எமது நாட்டிற்காக மாற்றுவார்கள் என்று எதிர்பார்ப்பது அறிவீன மாகும், அதுதான் அவர்களின் கலாசாரம் பண்பாடு, யதார்த்த நிலை, அவர்களின் பார்வையில் அது சரியானதே.

இந் நிலையில் தென்னிலங்கைப் பயணிகளும், யாழ். குடாப்பயணிகளும் மேலைத் தேசகலாசாரத்தினை பின்பற்றிக்கஜுர்ணாக்கடற்கரையில் காற்றுவாங்குவது எமது பிரதேச பண்பாட்டாளர்களிற்கு ஒருவிதபிரமையை ஏற்படுத்துகிறதுஎன்பதும் உண்மையே.

மேலைத்தேய நாகரிகத்தினைஉடையவர்கள்கஜுர்ணா கடற்கரைக்கு வந்து செல்வது எமது பிரதேசத்தின் கலாசார சீரழிவு என்று கூறுவது தவறாகும் ஆனால் எமது பிரதேச மக்கள் (நாகரிகம் என்ற பெயரில்) மேலைத்தேச கலாசாரத்தை பின்பற்றுவது, (பின்பற்ற நிலைப்பது)தான்தவறானதாகும் இந்நிலைக்குகஜுர்ணகடற்கரை வழிசமைக்க கூடாது என்பது தான் சான்றோரின் கருத்தாகும்.

### கலாசார சீரழிவு

கஜுர்ணாக் கடற்கரை அமைந்த காரைநகர் யாழ் குடா நாட்டில் இருந்து 22 கிலோமீற்றர் தொலைவில் உள்ளது. இங்குள்ள சூழ்நிலைகளைச் சாதகமாக்கிச் சமுதாய, சமூக கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் இளசுகள் தனிமையில் இனிமை காணும் நிலமையும், சமூக, சமுதாய கட்டுப்பாட்டுகளைமீறி வெளிப்படையாக மது அருந்துதல், ஆண், பெண் வேறுபாடின்றி மது அருந்துதல் மது போதையில் சண்டையிடுதல், அமைதியான முறையில் உல்லாசமாக பொழுதைக் கழிக்க வரும் பயணிகளைச் சீண்டுதல், பெண்களுடன் சேஷ்டை புரிதல் போன்ற செயற்பாடுகளும் நடைபெறுகின்றன. இவற்றையே கலாசாரச் சீரழிவு என வரையறுக்க முடிகின்றது. எமது இனத்தவரே, எமது பிரதேச வாசிகளே எமது பிரதேச கலாசாரத்திற்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் நடப்பது தான் எமது கலாசாரத்தை சீரழிக்கும் செயலாகும். அத்துடன் விடுமுறை நாட்களிலும்,

**ப. ஐங்கரன்**
**காரைநகர்**

வார இறுதி நாட்களிலும் நூற்றுக் கணக்கான வாகனங்கள் எல்லை மீறிய வேகத்துடன்(செல்வதும்)மது போதையுடன் கூடிய சாரதிகளின் வாகனம் செலுத்தும் முறையும், ஏனைய பயணிகளின் உயிருக்கே ஆபத்தை விளைவிக்கக் கூடியன. அண்மையில் இரு வீதி விபத்துக்கள் இடம் பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

### கலாசாரத்தைப் பாதுகாப்பது கடமை

இந் நிலையில் காலம் காலமாக அடிமைப்பட்டு வாழ்ந்த, ஒரு சுதந்திரக் காற்றை சுவாசிக்கத் துடிக்கும் சுதந்திரத்திற்காக தமது உயிரையே பல வழிகளிலும் தியாகம் செய்யும் இனம், தமது சமூக சமுதாய பண்பாட்டு விழுமிய கலாசாரங்களைக் கட்டிக் காப்பதும் இனத்தின் கடமையும் காலத்தின் கட்டாயமும் ஆகும்.

### உரிய அதிகாரிகளின் தவறு

நாம் உல்லாசப்பயணிகளை மட்டும் குற்றம் கூறுவதும் தவறானதாகும். ஏனெனில் உல்லாசத் துறைக்கு பொறுப்பான அதிகாரிகள் அல்லது பிரதேசத்தை பிரதிபலிக்கும் பிரதேசசபை அதிகாரிகளின் தவறும் சமபாதியாகவே உள்ளன எனலாம். ஏனெனில் அவைகளால் உல்லாச பயணிகளிற்கு பல வழிகளில் வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம் இந்தக் கடற்கரையைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரமுடியும்.

உல்லாசப் பயணிகள் மட்டுமல்லாது, அரச பணியாக வரும் அமைச்சர்கள் கூட இக் கடற்கரைக்கு வந்து செல்வது வழமையாகி விட்டது அந்த வகையில் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனா உல்லாச பயணத் துறைக்குப் பொறுப்பான அமைச்சர் காமினி லொக்குகே போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களுடன் யாழ் செயலக அதிகாரிகளும் கூட வந்து செல்வதும் வழமையானதாகும். அவ்வகையில் கஜுர்ணாகடற்கரையின்நிலைமை சொல்லித் தான் தெரிய வேண்டும் என்ற நிலை இல்லாது நேரடியாக அறிந்திருப்பார்கள் என்பதே உண்மையாகும். வருகை தந்த அமைச்சர்கள் நேரடியாக உல்லாசப் பயணிகளுடனும், பொதுமக்களுடனும கலந்துரையாடியதன் மூலமும் நிலைமையினையும் அதன் முக்கியத்துவத்தினையும் உணர்ந்திருப்பார்கள்.

இந்தளவில் அமைச்சரவையளவில் புனரமைக்க முடியாவிட்டாலும் கூட பிரதேச சபையளவில்லாவது உல்லாச பயணிகளுக்காக சேவைகளை வழங்க முன்வந்து உல்லாச பயணத்துறையை வளர்ப்பதோடு எமது கலாசாரத்தை பாதுகாக்க வேண்டும் குறிப்பாக

★ கஜுர்ணாக்கடற்கரைக்கு கொண்டு செல்லப்படும் வாகனங்கள் நிறுத்தப்பட்டு கடற்கரையில் இருந்து சில மீற்றர் தூரத்தில் தரிப்பிடம் அமைத்து கட்டுப்படுத்த வேண்டும். இதன் மூலம் குறித்த அமைப்பு வருமானம் பெறமுடியும் என்பதுடன், பயணிகள்-வாகன நெருக்கடிகளும் குறைவடைய இடமுண்டு.

★ கடலில் குளித்த ஆண்கள் பெண்களிற்கு என ஆடை மாற்றக் கூடிய மறைவான இடமில்லை. இதனால் கடலில் குளித்தவர்கள் விரும்பியோ, விரும்பாமலோ சூரியக்குளியல் குளிக்க வேண்டிய நிலமையுள்ளது. இந் நிலமையைகவனத்தில்எடுத்து பொருத்தமான கட்டடம் அமைக்கலாம். இதன் மூலம் எமது கலாசாரத்தை ஓரளவேனும் பாதுகாக்க முடியும் என்பதுடன் குடும்பத்துடன் வரக்கூடிய நிலையும் தோன்றும்.

★ இங்கு உல்லாசப்பயணிகள் ஆயிரக்கணக்கில் கூடுகின்றபோதும் பொது மலசல கூடம் (ஒன்றேனும்) இல்லை, இதனை அமைத்து உதவலாம்.

★ அடிப்படைத் தேவையான உணவு விடுதி ஒன்றுமேயில்லை. இதனைத் தனியார் கவனத்தில் எடுத்தாலும் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடியதாகவில்லை.

பயணிகளிற்கான உல்லாச வசதிகளை ஏற்படுத்த முடியாவிட்டாலும் அடிப்படைத் தேவைகளை பேணும் பூர்த்தி செய்ய சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முன்வரவேண்டும். இதன் மூலம் அதிகளவான உல்லாசப் பயணிகளைக் கவரக்கூடியவகையில்கஜுர்ணாக் கடற்கரை அமையும் என்பதுடன் ஒரு கட்டுப்பாட்டிற்குள் இருக்கும் போது எமது பிரதேச கலாசாரமும் பாதுகாக்கப்பட இடமேற்படும் என்பதில் ஐயமில்லை.

---

**மானுடத்தின் தமிழ்க்கூடல் 2002**

## நான்காம் நாள் நிகழ்வு

(இன்று செவ்வாய்கிழமை)

### காலை

9.00 - 10. 30 ஈகச்சுடர் ஏற்றல்
விழாச்சுடர் ஏற்றல்
**திரு. எஸ். பீ. சாமி**
அமைதி வணக்கம்
வரவேற்புரை
**திரு. சி. சேரலாதன்**
சிறப்புரை
**திரு. மு. திருநாவுக்கரசு**
சர்வதேசஅரசியலும், சிங்கள உயர் குழாமும்

10.00-12.30 அமர்வு: காண்பியக் கலைகள்
கட்டுரையாளர்கள்
**திரு. பா. அகிலன்**
கலையும் சிறுபான்மையினரும் ஈழத்தமிழர் காண்பியக் கலைகளின் பகிரனுபவம்
**திரு. ப. புஸ்பரட்ணம்**
ஈழத்தமிழர் வரலாற்று மீள் கண்டுபிடிப்பில் தொல்பொருட்களும் அவற்றின் பாதுகாப்பும்
குறிப்புரைஞர்கள்
**கோபாலி**
**திரு. சனாதனன்**

12.30- 1.30 மதிய இடைவேளை

1.30- 4. 00 அமர்வு - ஊடகம்
தலைமை
**திரு. வி. ரீ. தமிழ்மாறன்**
கட்டுரையாளர்கள்
**திரு. ஆ. சிவநேசச் செல்வன்**
தேசியஇன முரண்பாட்டுப் பின்னணியில் தொடர்பு ஊடகப் பண்பாடு
**திரு. பா. சிவகுமார்**
ஊடகப்பண்பாடும் இன்றைய உலக மயமாக்கலின் அரசியலும்
**மஞ்சுள வெடிவர்த்தனே**
இன ஒடுக்கு முறையும்
சிங்களப் பத்திரிகைகளும்
**அமரதாஸ்**
உலகளாவிய ரீதியிலும் ஈழப் போர்க் காலத்திலும் ஒளிப்படக் கலையின் இயங்குநிலை
குறிப்புரைஞர்கள்
**திரு. எஸ். எம். கோபாலரத்தினம்**
**திரு. சி. ரகுராம்**

4.00 - 4.45 சிறப்புரை
**திரு. இரா. திருமாவளவன்**

4.45-5.45 நிறைவுரை
**திரு. புதுவை இரத்தினதுரை**

6.00-8.00 கலைநிகழ்ச்சி
மட்டக்களப்பு சீலாமுனை கலைக் கழகம் வழங்கும்
**'அருச்சுனன் பெற்ற பாசுபதம்'**
-வடமோடிக்கூத்து

நெறியாள்கை
**அண்ணாவியார் யோகன்.**

---

# அச்செழுப் பகுதியில் 60 வீடுகள் இன்னமும் படையினர் வசம்

(நீர்வேலி)

512வது படைப்பிரிவுத் தலைமையகம் அமைந்துள்ள அச்செழுப் பகுதியில், கடந்த 6 ஆண்டுகளாக தடைப்பட்டிருந்த நீர்வேலி, புன்னாலைக்கட்டுவன் வீதி, மக்கள் பாவனைக்காக கடந்தவாரம் திறந்துவிடப்பட்டுள்ளது.

இதேவேளை, இப்பகுதியில் இராணுவத்தினரின் பாவனையில்இருந்த பொதுமக்களின் 75 வீடுகளில் 15 வீடுகள் உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

அத்துடன், அச்செழு அம்மன்ஆலயம், அச்செழு சைவப் பிரகாச வித்தியாலயம் என்பனவும் உரிய நிர்வாகங்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

(உ-239)

# மானுடத்தின் தமிழ்க் கூடல் - 2002

## மூன்றாம் நாள் காட்சிகள் (21. 10. 2002)



வரவேற்புரை:- தமிழ்விழி

பேராசிரியர் சுனில் ஆரியரத்ன

அம்மன்கிளி முருகதாஸ்


பேராசிரியர் அ.சண்முகதாஸ்





உரையாற்றும் ஏனைய அறிஞர்களையும் நிகழ்வில்கலந்து கொண்ட ஏனைய பேராளர்களையும் படங்களில் காணலாம்.

படங்கள்:
கே.ஜெயகாந்தன்
ரி.ரி.மயூரன்



அன்பு வாசகர்களே!

வலம்புரியின் வாரமலர்

# சங்கு நாதம்

ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் வலம்புரி இணைக்கப்படாமல்
தனித்து ரூ.12/= விலையில் பெற்றுக் கொள்ளுங்கள்

தினசரி வெளிவரும் வலம்புரியின் விலையில் மாற்றமில்லை

அறிஞர்களின் மனங்களில் நீங்காத இடம்பிடித்துவிட்ட சங்குநாதத்தை நீங்களும் வாசிக்கத் தவறாதீர்கள். இலங்கை பூராகவும் விற்கப்படும் சங்குநாதம் இனிமேல் உங்கள் உறவுகளுக்காக வெளிநாடுகளுக்கும் அனுப்பப்படுகின்றது.

சங்குநாதம்
வலம்புரியின் இணைப்பின்றி
ரூ. 12/= மட்டுமே.

# இன்று ஒரு தகவல்

## உடல் மொழியும் உண்டு

ஒரு மனிதர், அவர் யாரிடமோ தொலைபேசியில் பேசிக் கொண்டிருக்கிறார். சற்று தூரத்திலிருந்து அதை நாம் கவனிக்கிறோம்; அவர் பேசுகிற வார்த்தைகள் என்ன என்பது நம் காதில் விழவில்லை. ஆனால் அவர் பேசிக் கொண்டிருப்பது நல்ல செய்தியா கெட்ட செய்தியா என்பதை நம்மால் யூகிக்க முடிகிறது; மகிழ்ச்சியான செய்திகளைப் பேசும் போது முகம் மலருகிறது. புன்னகை பூக்கிறது. இதில் ஒன்றை நீங்கள் கவனிக்கவேண்டும். தொலைபேசியில் நாம் பேசுகிறபோது நம்மோடு பேசுகிறவர் எதிரே இல்லை. அவர் தொலைபேசி வழியாக நமது குரலை மட்டும் தான் கேட்கப் போகிறார். நமது முகத்தை அவர் பார்க்கப் போவதில்லை. அப்படியிருந்தும் அப்போது நமது முகம் ஏன் மலர வேண்டும்? இதைத் தான் உடல் மொழி என்று சொல்கிறார்கள்;

நம்மை அறியாமலேயே நமது உடம்பு செய்திகளைத் தெரிவிக்கிறதுபாருங்கள். அது தான் உடல் மொழி, ஒருமனிதர் தொலை பேசியில் பேசிக் கொண்டிருப்பதை நீங்கள் தூரத்தில் இருந்து கவனித்துக் கொண்டே அவர் நண்பரோடு பேசுகிறாரா? மனைவியோடு பேசுகிறார? குழந்தையோடு பேசுகிறாரா? மேலதிகாரியிடம் பேசுகிறாரா? அல்லது அவருக்குக் கீழே பணியாற்றுகிறவர்களிடம் பேசுகிறாரா? என்பதைக் கண்டு பிடிக்கலாம்; அதற்குக் காரணம் அவருடைய உடல் மொழி. இந்த உடல் மொழி கூட நமது வாழ்க்கையின் முன்னேற்றத்துக்குப் பயன்படும், இது பற்றியெல்லாம் சில நிபுணர்கள் ஆராய்ந்திருக்கிறார்கள்;

அவர்கள் சில விபரங்களைச் சொல்கிறார்கள். குறிப்பாக ஒருவர் தன்னுடைய நாற்காலியிலே கிட்டத்தட்டப் படுத்துக் கொள்ளாத குறையாக உட்கார்ந்திருக்கிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள்; எதிரே இருக்கிறவர் பேசுவது அவருக்குப் பிடிக்கவில்லை என்று அர்த்தமாம்;

தலையைச்சொறிந்து கொள்வது, வேறு வேறு திசைகளில் பார்ப்பது, கொட்டாவி விடுவது, கால்களை மாற்றிப் போட்டு உட்காருவது களைப்பாகக் கைவிரல்களைப் பின்னிக் கொள்வது, அடிக்கடி கடிகாரத்தைப் பார்ப்பது இப்படியெல்லாம் ஒருவர் செய்து கொண்டிருக்கிறார் என்றால், நாம் கூடியவிரைவில் அந்த இடத்தைவிட்டு எழுந்து வந்து விடுவதுநல்லது. ஏனென்றால் இவையெல்லாம் அவருடைய சலிப்பு, சோர்வு, ஆர்வமின்மை இவற்றிற்குஅடையாளங்கள்.

நம்முடைய பேச்சுஅவரைச் சலிப்படைய வைத்துவிட்டது என்று பொருள். அவர்மிகவும் சோர்ந்து போய் விட்டார் என்று பொருள். நம்முடைய பேச்சில் அவருக்கு ஆர்வமில்லை என்று பொருள்.

அதே நேரத்தில் நாற்காலியின்நுனியில் அமர்ந்துஉடலை முன்னுக்கு நகர்த்தி எதிரே இருக்கிறவரின் கண்களைப் பார்த்துக் கொண்டேபேசினாலும் சரி, அல்லது பேச்சைக் கேட்டாலும் சரி, உங்கள் பேரில் மற்றவர்களுக்கு உள்ள பிடிப்பு அதிகரிக்கும் நாம் எப்படிப்பட்டவர் என்பதை நம் உடம்பும், நடை, உடை, பாவனையும் அடுத்தவர்களுக்குக் காட்டிக் கொடுத்துவிடும்;

இளைஞர்களே! உங்கள் உடம்பு, உங்கள் பார்வை, நடை, உட்காரும் விதம்- இவற்றைவைத்துக்கொண்டே நீங்கள் பொறுப்பானவரா? முரடரா? அலட்சியமானவரா? மரியாதை தெரிந்தவரா? அடக்கமானவரா? நம்பிக்கைக்கு உரியவரா? நாணயமில்லாதவரா? பயந்தவரா? திறமை சாலியா? அப்பாவியா? என்பதைக் கண்டு பிடித்துவிட முடியும். ஆகவே இந்தஉடல் மொழியைப் புரிந்து கொண்டு நம்மைக் கொஞ்சம் சரிப்படுத்திக்கொண்டுவிட்டால், வாழ்க்கையில் சுலபமாக பல காரியங்களைச் சாதித்து விடலாம்;

ஒருமனநல மருத்துவமனை அங்கே ஒருவர் ஒரு நாற்காலியில் உட்கார்ந்துகொண்டுகார் ஓட்டுவது மாதிரிப்பாவனை செய்து கொண்டிருந்தார்; ஸ்டியரிங் கைத் திருப்புவது மாதிரி- பின்னால் வருகிற வண்டியை நிற்கச் சொல்வது மாதிரி. அதன் பின்னர் இவர் ஒதுங்கிக் கொண்டு அவருக்கு வழிவிடுவது மாதிரி இப்படியெல்லாம் சேட்டைகள் பண்ணிக் கொண்டிருந்தார்; இதைப் பார்த்துக் கொண்டிருந்த ஒருவர் பக்கத்திலிருந்த இன்னொருவரிடம் 'இவர்ஏன் இப்படிச் செய்கிறார்? என்று கேட்டார். இவருக்குகார் ஓட்ட வேண்டும் என்றுஆசை; அது நிறைவேறாமல் போனதால் இப்படிச் செய்கிறார்' என்றார் அவர் 'இப்போதுநீங்கள் கார் ஓட்டவில்லை; வெறும் நாற்காலியில் தான் உட்கார்ந்திருக்கிறீர்கள்என்று நீங்கள் சொல்லக் கூடாதா?' என்றார் இவர், 'அதுமுடியாது.. ஏனென்றால் அந்தக் காரைக் கழுவுவதற்காக அவர் தினமும் எனக்கு பத்துரூபாய் கொடுத்துக் கொண்டிருக்கிறாரே!' என்றார் அவர்;

தென்கச்சிகோ; சுவாமிநாதன்

நட்டத்தில் இயங்கும்

# இல. பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

## காரணங்கள் கண்டு பிடிப்பு

### சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தகவல்

(கொழும்பு)

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நஷ்டத்துக்கான காரணங்கள் கண்டறியப்பட்டுள்ளதாக சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கையில்;

இக்கூட்டுத் தாபனத்தின் முன்னைய நிர்வாகம் மேற்கொண்ட முறைகேடான நடவடிக்கைகளாலும், பொருத்தமற்ற தீர்மானங்களாலும், அந்த நிறுவனம் பாரிய நிதி நெருக்கடிகளை எதிர் கொண்டுள்ளது.

நிதிநிர்வாக முறைகளைமீறி பலகட்டடங்களைவாடகைக்கு எடுத்தது அத்தகைய ஒரு நடவடிக்கை ஆகும்;

இந்நிறுவனத்துக்காக கட்டடங்கள் குத்தகைக்கும் வாடகைக்கும் எடுத்த 10 சம்பவங்கள் உண்டு.

கூட்டுத்தாபனம்இக்காரணத்துக்காக ஒரு கோடி ரூபாவரை வாடகை செலுத்தியுள்ளது.

ஆனால், இத்தகைய வாடகைக்கோஅன்றிகுத்தகைக்கோ கட்டடங்களை பெற்றுக் கொள்ள கூட்டுத்தாபனத்துக்கு எவ்வித அவசியமும் கிடையாது.

இவ்வாறு பெறப்பட்ட கட்டடங்களும் எந்தவொருநோக்கத்துக்காகவும் பயன்படுத்தப்படவில்லை; அவை நீண்ட நாட்களாக மூடப்பட்டேஇருந்தன;

கூட்டுத் தாபனத்தின் உயர் அதிகாரிகள் தமது தேவைகளைக்கருதி இத்தகையசட்ட விரோதமான கணக்குகளை மேற்கொண்டுள்ளமை இப்போதுகண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இதனையும் விட கூட்டுத் தாபனம் தனது உத்தியோக பூர்வமான காரியங்களுக்கு பொருந்தாத நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வந்தமைகண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் நிகழ்ச்சிகளை நடத்துவதற்காக நடமாடும் மேடையொன்றினை சுமார் 13 கோடி ரூபா செலவில் கூட்டுத்தாபனம் அமைத்துள்ளது.

எனவே பெற்றோலியக்கூட்டுத் தாபனத்தின்இவ்வாறான மோசடிகளை உடன் விசாரணை செய்யுமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது (க-8)

# வலிகாமம் கல்வி வலய மட்ட

# சமூகக்கல்வி போட்டி முடிவுகள்

(உடுவில்)

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையில் இடம்பெற்ற வலயமட்ட சமூகக் கல்வி ஆக்கக் கண்காட்சிப் போட்டியின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. இவ்வலயத்திலுள்ள பாடசாலைகளின் தரத்துக்கேற்ப 04 வகையாக பிரிக்கப்பட்டு இவை நடாத்தப்பட்டன;

**வகை 1 பாடசாலைகள்**

01 செயற்றிட்டம்/ ஆய்வுக் குறிப்பு

ப; பியூஸ்லஸ் மயிலிட்டி றோ; க. த. பா, அ. பிரதீபா சுதுமலை வடக்கு அ. த. க; பா, சி. விஜயகாந் உடுவில் மான்ஸ் ம; வித்தி, சி. சர்மதி தொல்புரம் விக்னேஸ்வரா வித்தி

02. சித்திரம்/ ஓவியம்/ புகைப் படம்

ச; ஜீவதாஸ் தொல்புரம் விக்னேஸ்வரா, ச. சுகிந்தன் சுதுமலை வடக்கு அ. த. க. பா, யோ. சசிக்குமார் உயரப்புலம் குணபாலன் வித்தி, ச. யஜீதரா மாதகல் நுணசை வித்தி

03 செதுக்கு வேலை/ மாதிரி உரு

இ. சிறிதரன் காங்கேசன் துறை ம; வி, ந. பிரதீபன் வீமன்காமம் ம. வி, ந. சிறீபரன் தொல்புரம் விக்னேஸ்வரா வித்தி, வி; இராதா கிருஷ்ணன் உயரப்புலம் குணபாலன் வித்தி

04. தொழில்நுட்ப வேலை

இ. அருந்தவராஜ் மயிலிட்டி றோ. க. த; பா, த. தவச்செல்வன் தொல்புரம் விக்னேஸ்வரா வித்தி, யோ. கஜதீபன் காங்கேசன்துறை ம. வித்தி, ச; சிவாகரன் குட்டியப்புலம் அ. த; க; பா,

05; வரலாற்றுக் குறிப்புகள்

ந. சர்மினி குட்டியப்புலம் அ. த; க. பா, மோ ஜீவராஜ் தொல்புரம் விக்னேஸ்வரா வித்தி, இ. சிறீதரன் காங்கேசன்துறை ம. வி.

**வகை 2 - பாடசாலைகள்**

1; செயற்றிட்டம்- ஆய்வுக் குறிப்பு:

1 ம் இடம் - ஸ்ரீ சிந்துஜா- மாதகல் சென்ஜோசப் ம; வி

2 ம் இடம்- தி. சுகிர்தா- சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தி.

3 ம் இடம் ச. தாரணி - தாவடி இ. த. க. பா.

2) சித்திரம் - ஓவியம் புகைப்படம்

1 ம் இடம்— லோ. சுரேஷ்- தாவடி இ. த. க. பா

2 ம் இடம்- சி. கோமதி சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தி

3 ம்இடம்தி. வெறோனியா— சில்லாலை றோ. க. த. க. பா

4 ம் இடம்- சி. சிவரூபன்- மயிலணி சைவ மகாஜனா வித்தி.

குணதாஸ் - சித்தன்கேணி ஸ்ரீகணேச வித்தி

3) செதுக்கு- வேலை- மாதிரி உரு:

1 ம் இடம்- பா. ரதீஸ் குமார்-சுழிபுரம் வடக்கு ஆறுமுகவித்தி.

2 ம் இடம்-அ; சுஜிந்திரன்- மயிலிட்டி கலைமகள வித்தி

3 ம் இடம் கே. எட்வின்- ஜெயராஜ்- சில்லாலை றோ. க. பா

4 ம் இடம்- தா. சிந்துஜா- தாவடி இ. த. க. பா

5 ம் இடம்-வ. நிறோஜயா- அராலி சரஸ்வதி ம. வித்தி

4) வரலாற்றுக் குறிப்பு:

1 ம் இடம்— மு. சிந்துஜா- பிரான்பற்றுக் கலைமகள் வித்தி

2 ம் இடம்- கி; நளினி - தாவடி இ. த. க பா

3 ம் இடம்- சி நளினி - அராலி சரஸ்வதி ம. வித்தி

4 ம் இடம்- ச. கஸ்தூரி- மயிலணி சைவமகாஜனா வித்தி

5) தொழில்- நுட்ப-வேலை:

1ம் இடம்- ஜே. எட்வின் ஜெயராஜ்- சில்லாலை றோ, க. த. க; பா

2 ம் இடம்- வ. சேதாரன்- சித்தன்கேணி ஸ்ரீகணேச வித்தி

3 ம் இடம்- வே. துஷ்யந்தன்- அளவெட்டி அருணாசலம் வித்தி

**வகை -3 பாடசாலைகள்**

01. செயற்றிட்டம் ஆய்வுக் குறிப்பு

1 ம் இடம் - அ; பிரியங்கா - மானிப்பாய் மகளிர் கல்லூரி;

2ம் இடம்-பொ. டிலோன்- மல்லாகம் ம; வித்தி.

3 ம் இடம்-வி' தயாளினி- வட்டு மத்திய கல்லூரி.

4ம் இடம்-க. சஜீவ்-அராலி இந்துக் கல்லூரி.

02; சித்திரம்-ஓவியம்- புகைப்படம்:

1 ம் இடம்-ஆ இனோஜா- மல்லாகம் ம. வித்தி.

2 ம் இடம்-ஞா. பசில்டா- இளவாலை கன்னியர் மடம் ம. வித்தி.

3 ம் இடம்-ந; சரத்சஞ்சீலன்-மூளாய் சைவப்பிரகாச ம. வித்தி.

4 ம் இடம்-ஞா. போல்அன்ரன்-இணுவில் இந்துக் கல்லூரி.

03; செதுக்கு வேலை- மாதிரி உரு:

1 ம் இடம்-சி தனுசா- இராமநாதன் கல்லூரி.

கு. ஜென்சி- இராமநாதல் கல்லூரி.

2 ம் இடம்- மெ. லலிதா- கந்தரோடை தமிழ்க்கந்தையா வி.

3 ம் இடம்-பு; துஷ்யந்தன்- மல்லாகம் ம. வித்தி.

4 ம் இடம்-நா. நாகதீபன்- மூளாய் சைவப்பிரகாச ம; வித்தி.

5ம் இடம்- உ; பிரசாந்தன்- வட்டு. மத்திய கல்லூரி.

04; வரலாற்றுக் குறிப்புகள்:

1 ம் இடம்-க. அர்ச்சனா- மல்லாகம் ம. வி.

2 ம் இடம்-கு. சர்மிளா- வட்டு. மத்திய கல்லூரி

3 ம் இடம்- செ திருக்குமரன்-யூனியன் கல்லூரி

4 ம் இடம்-செ கண்ணதாஸ்- சுதுமலை சிந்மய பாரதி வித்தி.

5 ம் இடம்-பா; யாதவன்- மூளாய் சைவப்பிரகாச ம. வித்தி, க. றகிதா- இணுவில் இந்துக் கல்லூரி.

5. தொழில் நுட்பவேலை

1 ம் இடம்-செ. சுதர்சன்-கந்தரோடை தமிழ்க்கந்தையா வி; அ சத்தியசீலன், கந்தரோடை தமிழ்க்கந்தையா வி.

2 ம்இடம்-கு. பிரசாத், மல்லாகம் ம. வித்தி.

3 ம் இடம் - அ. ததீஸ்வரன்-வட்டு மத்திய கல்லூரி.

4 ம் இடம் - ப. கினிவ்டசி- ஆனைக்கோட்டை றோ. க. த. க. வி.

5 ம் இடம்- ஜெ. ஜெஸ்சிராசிகா—இளவாலை கன்னியர் மடம் ம. வி;

(6-ம் பக்கம் பார்க்க)

கொத்தணி பஸ் நிறுவனங்களின்

# 39வீதமான பங்குகள் தனியாரிற்கு விற்கப்படும்

### போக்குவரத்து அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு)

கொத்தணி பஸ்நிறுவனங்களின் 39வீதமான பங்குகளை எதிர்வரும் 27ம்திகதி தனியாருக்கு விற்பனை செய்ய இருப்பதாக போக்குவரத்து அமைச்சர் உபாலி பியசோம தெரிவித்துள்ளார்.

பஸ்நிறுவனங்கள் தனியார் மயப்படுத்தப்பட்டாலும் நிர்வாகம் தொடர்பாக அரசாங்கம் கூடியகவனம் செலுத்தும் என அமைச்சர் மேலும் கூறினார்;

இதேவேளை; டிப்போக்கள் மூலம்கிடைக்கும் வருமானம் அங்கு கடைமையாற்றும் ஊழியர்களின் சம்பளத்தை வழங்குவதற்குகூட போதுமானதாக இல்லை, இதனால் கொத்தணி பஸ்நிறுவனங்களின்சிலபங்குகளைதனியாருக் விற்பனைசெய்வதன் மூலம் சிறந்த முகாமைத்துவத்தை எதிர்பார்க்கலாம் என்றும் அமைச்சர் உபாலிபியசோம அறிவித்துள்ளார்;

(க-7)

யாழ்ப்பாணம்

### யாழில் பொறியியல் பீடம் அமைக்க ஏதுவாக

# பொறியியல் பீடங்களின் செயற்பாடுகளை அறிய

# உயர்மட்டக்குழு தென்னிலங்கை பயணமானது

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழகத்தில் அமைக்கப்படவுள்ள பொறியியற் பீடம் எவ்வாறமைதல் வேண்டும் என்பது பற்றி ஆரய்ந்து பூரணமனதொரு அறிக்கை தயாரிப்பதற்கு முன்னேடிய சநடடிலுள்ள இரமூறு பொறியியற் பீடச் செயற்பாடுகள் பற்றி நேரடியாக அறிந்து கொள்வதற்கு யாழ் பல்கலைக்கழக உயர்மட்டக் குழுவொன்று நேற்றைய தினம் அங்கு சென்றுள்ளது.

விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் இ.குமாரவடிவேல்தலைமையில்சென்றுள்ள இக்குழுவில் பௌதிகவியல் துறைத் தலைவர்பேராசிரியர் க.கந்தசாமி, கணனித்துறைத் தலைவர் கலாநிதி எஸ். மகேசன், விவசாயப் பொறியியல் துறைத் தலைவர் எஸ். விஜயரத்தினம் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

இக்குழுவினர் மொறட்டுவ றுகுண, பேராதனைப் பல்கலைக் கழகங்களில் அமைந்துள்ள பொறியியற் பீடங்களுக்குச் செல்வர்.

இதற்கான ஏற்பாடுகளை அவ்வப் பல்கலைக்கழக உபவேந்தர்களும் பொறியியற் பீடாதிபதிகளும் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

யாழ். பொறியியற் பீடம் பற்றிய பூரணத்துவமான அறிக்கையொன்றை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு கோரியிருந்ததும் அவ்வறிக்கையைத் தயாரிக்க பல்கலைக்கழக மூதவை உயர்மட்டக் குழுவொன்றை அமைத்திருந்ததும் அறிந்ததே.

இக்குழு விரிவான அறிக்கையொன்றை இன்னுமொரு மாத காலத்துள் தயாரித்துள்ளதாக தெரியவருகிறது.

(உ)

## பேச்சுப்போட்டி முடிவுகள்

(யாழ்ப்பணம்)

அரியாலை சக்திபண்ணிசை மன்றம், நவாரத்திரிதினத்தை முன்னிட்டு நடத்திய பேச்சுப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன:

கீழ்ப் பிரிவு

முதலாம் இடம்- ஜீ அஜந்தாஜினி

இரண்டாம் இடம்- தே மதுரந்தி

மூன்றாம் இடம்- பு துவாரகா;

மத்திய பிரிவு

முதலாம் இடம்- சி; விருஷன்

(உ)

## வலிகாமம்...

### வலை04 பாடசாலைகள்

01 செயற்றிட்டம் ஆய்வுக் குறிப்புகள்

1 ம் இடம்-தி.தவரஜனி ஸ்கந்தவரோதயாக் கல்லூரி

2 ம் க லோகேஸ்வரி சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி

3 ம் இடம்-ம சுதர்சன் வசாவிளான் ம.ம.வித்தி

4 ம் இடம்- க விசாளினி சங்கானை சிவப்பிரகாச ம.வி

5 ம் இடம்-ந நடேஸ்வரன் விக்ரோறியாக் கல்லூரி

02 சித்திரம் –ஓவியம்-புகைப்படம்

1 ம் இடம்-ஜெ மதுரா உடுவில் மகளிர் கல்லூரி

2 ம் இடம்-த நிமிரஜன் இணுவில் மத்திய கல்லூரி

3 ம இடம்–மு.கலைவாணி வசாவிளான் ம ம வித்தி

4 ம இடம்-சி கஜேந்திரன் மகாஜனக் கல்லூரி

5 ம் இடம்-து சுகிதரன் சண்டிலிப்பாய்இந்துக்கல்லூரி

0.3 செதுக்குவேலை-மாதிரி உரு:

1 ம் இடம்: எஸ் தினேஸ்குமார் விக்ரோறியாக் கல்லூரி

2 ம் இடம்-சி.லவண்யா இணுவில் மத்திய கல்லூரி

3 ம இடம்-ந உதயச்சந்திரன் சங்கானை சிவப்பிரகாச ம வி

4 ம இடம்-நா.வர்ணன் வசாவிளான் ம.ம.வி

5 ம் இடம்: பா பனுஜா மகாஜனாக் கல்லூரி

04 வரலாற்றுக்குறிப்பு

1 ம் இடம்- ஸ் தினேஸ்குமார் விக்ரோறியக் கல்லூரி

2 ம் இடம்-இ கிருஷ்ணராஜ் இணுவில மத்திய கல்லூரி

3 ம் இடம்- க. ஜதீசன் வசாவிளான ம ம.வி

4 ம் இடம்-எஸ் . ச ஜிதா சங்கானை சிவப்பிரகாசம,

5 ம் இடம்-இ.சுகன்யா மகாஜனாக்கல்லூரி

05. தொழில் நுட்ப வேலை

1ம் இடம்- ச சதீஸ் சங்கானை சிவப்பிரகாச ம.வி

2ம் இடம்- த. சிவதர்சன் சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி

3ம் இடம்- ஐ. ஜெயக்குமார் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி.

4ம இடம்- த. றினின் வசாவிளா ம. ம வி.

5ம் இடம்- கு ஜசிந்தன் மகாஜனாக் கல்லூரி

# கட்டுநாயக்கா விமானநிலையத்தில்

# கற்பகம் விற்பனை நிலையம்

## அமைச்சர் மகேஸ்வரன் தகவல்

(அச்சுவேலி)

பனைவளத்தின் உற்பத்தியை பெருக்கும் நோக்கில், கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் ''கற்பகம்'' விற்பனை நிலையம்மிக விரைவில் திறந்துவைக்கப்படவிருக்கின்றது.

இவ்வாறு, நேற்று முன்தினம் காலை, வல்லை முனியப்பர் ஆலய முன்றலில்இடம் பெற்ற10இலட்சம்பனைவிதை நாடுகைத்திட்ட அங்குரார்ப்பண வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட, இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சர் தி.மகேஸ்வரன் தெரிவித்தார்.

பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் பொ. சிவபாதம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில், எனது அமைச்சின் கீழ் இயங்கும் பனை அபிவிருத்திச்சபையின் முன்னேற்றத்திற்காகவும், பனையை நம்பிவாழும் தொழிலாளர்களின் நலனுக்காகவும், என்னாலான பங்களிப்புகளை அவ்வப்போது வழங்கத்தயங்கமாட்டேன்.

பனை வள உற்பத்திகளை வெளிநாடுகளிலும் விற்பனையாக்கும் பொருட்டு, கட்டுநாயக்கா சர்வதேசவிமானநிலையத்தில், பனை அபிவிருத்திச் சபையின் கீழ் இயங்கும்'கற்பகம்' விற்பனை நிலையத்தை திறந்துவைக்க நடவடிக்கை எடுத்துள்ளேன்.

அத்துடன், வடமாகாண பனை, தென்னை பனை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் கோரிக்கையையடுத்து, காரைநகர் பொன்னாலைப்பகுதியில், ஒருகைத் தொழில் பேட்டையையும் நிறுவ நடவடிக்கை எடுத்துள்ளேன் என்றுகுறிப்பிட்டார்.

பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் பொ; சிவபாதம் பேசுகையில்-:

இராணுவ வன்செயல்களினால் சுமார் 25 இலட்சம் பனைகள்படையினரால்அழிக்கப்பட்டுவிட்டன இதனை நிவிர்த்தி செய்யும் நோக்கில், தற்பொழுது பனை அபிவிருத்திச்சபை, மீள்நடுகைத்திட்டத்தை ஆரம்பித்துள்ளது.

இதற்கு ஸ்ரீலங்கா அரசாங்கமும், அரசசார்பற்ற நிறுவனங்களும், நிதிஉதவிகளை வழங்கி வருகின்றன.

யாழ். மாவட்டத்தில், பனை மரங்களைத்தறித்து இயற்கை அழிவை ஏற்படுத்தியதனால் தான், இங்கு மழைகுறைவடைந்துள்ளது.

இலங்கை பூராகவும் 10 இலட்சம் பனம் விதை நடுகைத்திட்டத்தில், வடமராட்சியில் ஒரு லட்சத்து 5 ஆயிரம் விதைகளும், மிகுதி விதைகள் வலிகாமம், தென்மராட்சி தீவகம் போன்றபகுதிகளில் நாட்ட பனை அபிவிருத்திச் சபை திட்டமிட்டுள்ளது என்றும் குறிப்பிட்டார்,

இவ் வைபவத்தில், யாழ். சிவில் இணைப்பு அதிகாரி பிரிகேடியர் வசந்தகுமார, பருத்தித்துறை இராணுவ முகாமின் சிவில் இணைப்பு அதிகாரி மேஜர்யாப்பா, நெல்லியடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஸ்ரீ வர்த்தனா, யாழ். உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ். மாநகரசபை முதவர் எஸ். கந்தையன், கரவெட்டி பிரதேச செயலர் செ. ஸ்ரீநிவாசன், யாழ். மேலதிக அரசஅதிபர் து. வைத்திலிங்கம் உட்பட பனை அபிவிருத்திச் சபையின் முகாமையாளர், உத்தியோகத்தர்களும், வடமராட்சிப் பகுதிகிராம சேவை அலுவலர்களும் கலந்துகொண்டனர்.

(உ-14)

## நூலக நாள்

(கோப்பாய்)

உலக, பாடசாலை நூலக நாள் நிகழ்வுகளைச் சகல பாடசாலைகளிலும் எதிர் வரும் 28 ஆம் திகதி அனுட்டிக்குமாறு மனிதவள அபிவிருத்தி, கல்வி பண்பாட்டமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார்.

(உ-79)

## தாலிக்கொடி அபகரிப்பு

(நவக்கிரி)

நித்திரையில் இருந்தகுடும்பப் பெண்ணின் தாலி அபகரிக்கப்பட்டசம்பவம்அண்மையில் அச்சுவேலி தச்சன் தோட்டப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

நள்ளிரவில்ஜன்னல்கம்பியை அறுத்து உள்ளே நுழைந்ததிருடர்கள்வை. செல்வராணிஎன்பவரது சுமார் ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான தாலிக் கொடியை களவாடிச் சென்றுள்ளனர்;

(உ-233)

### குமுதினிப் படகு

## திருத்தம்

(நெடுந்தீவு)

நெடுந்தீவு - குறிகட்டுவான் இடையே சேவையில் ஈடுபட்டு வந்த குமுதினிப் படகுத் திருத்த வேலைகள் ஆரம்பமாகியுள்ளன.

வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான மேற்படி படகு பழுதடைந்த காரணத்தால் நீண்ட காலமாக படகுச் சேவை இடம்பெறவில்லை.

(உ-249)

## பயிற்சிப் பட்டறை

(மந்திகை)

கோழிப் பண்ணையாளர்களுக்கான, கோழி வளர்ப்பில் நவீன உத்திகள் தொடர்பிலான பயிற்சிப் பட்டறை இன்றும் நாளையும்இடம்பெறவுள்ளது.

இன்று காலை 8 30மணிக்கு வடமராட்சிப் பகுதி மக்களுக்கான பயிற்சிப் பட்டறை வட இந்து மகளிர் கல்லூரியிலும், நாளை திருநெல்வேலி விவசாயப் பயிற்சிக் கல்லூரியிலும் இடம் பெறவுள்ளது.

கோழிப்பண்ணையாளர்கள் மாணவர்கள், ஆசிரியர்கள்' இப்பயிற்சிப் பட்டறையில் கலந்து கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(உ-23)

### இலங்கை அரசியல் ஆய்வாளர்

# ரோஹான் குணரத்ன மீது சட்ட நடவடிக்கை

# எடுப்பது குறித்து மலேசிய அரசு ஆராய்வு

(கொழும்பு)

இலங்கையைச் சேர்ந்தவரான அரசியல் ஆய்வாளர் ரோஹான்குணரத்ன மீது சட்டநடவடிக்கை எடுப்பது பற்றி மலேசிய அரசாங்கம் தீவிரமாக ஆலோசித்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப் புலிகள் உட்பட அரசுக்கு எதிராக ஆயுதம் ஏந்திப் போராடிய அமைப்புகள் பலவற்றின் ஆரம்ப காலம் தொட்டு இற்றைவரையரன நடவடிக்கைகளின் விபரங்களை நூல்களாக எழுதி வெளியிட்டிருப்பவர் இவர்.

அண்மையில் இவர் எழுதிய ''இன்சைட் அல் குவேதா'' என்றநூலே மலேசிய அரசாங்கத்தின் கோபத்திற்கு உள்ளாகியுள்ளது;

மலேசியா அரசாங்கத்திற்கும் அல்குவேதா அமைப்பிற்கும் தொடர்பு உண்டெனவும், அமெரிக்க தலைநகரங்கள் மீதான 2001 செப்டம்பர் 11 தாக்குதல்களுக்கு முன்னர் அல்குவேதா அமைப்பு மலேசியா ஊடாகவே பெருமளவு பணத்தை அனுப்பியதெனவும் அந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நூலிலுள்ள விடயங்கள் தொடர்பாக ஐ. நா. பாதுகாப்பு கவுன்சில் மலேசிய அரசாங்கத்திற்குஅறிக்கை சமர்ப்பித்துள்ளது.

இதனால் மிகவும் விசனமடைந்துள்ள மலேசிய அரசாங்கம், தம்மைப் பற்றி எழுதப்பட்டவை பொறுப்பற்ற வார்த்தைகள் என தெரிவித்துள்ளது.

அத்துடன் அந்நாட்டின் பிரதிப் பிரதமர் அப்துல்லா பாதலி, ரோஹான்குணரத்னவுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பது பற்றி யோசிப்பதை ஊர்ஜிதம் செய்துள்ளார்;

இதேவேளை, பயங்கரவாதத்திற்கு எதிராக மலேசியா முன்னணியில் நின்று போரிடுவதும் இது விடயத்தில் அமெரிக்காவுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்குவதுடன், பயங்கரவாதிகள் பலரையும் கைது செய்துள்ளது;

இது இவ்விதமிருக்க ஐ: நாவின்மேற்படி அறிக்கைகுறித்து மலேசியா தனது ஆட்சேபனையையும் வெளியிட்டுள்ளது.

(உ)

## கருத்தொருமைப்பாட்டு திணைக்களத்தைக் கலைத்து விட முடிவு

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் செயலர் பிரட்மன் வீரக்கோன் தலைமையில் இயங்கி வந்த புனர்வாழ்வு புனரமைப்பு கருத்தொருமைப் பாட்டுத் திணைக்களத்தை கலைத்து விட்டு வடக்கு-கிழக்கு புனர்வாழ்வு புனரமைப்பு நடவடிக்கைகளை கூட்டுச்செயலணியிடம் ஒப்படைக்க அரசு முன்வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளிற்கும் சமாதானச் செயலகத்தின் செயலாளர் பேனாட் குணதிலக்காவிற்கும் இடையில் கிளிநொச்சியில் இடம்பெற்ற சந்திப்பின் போது வடக்கு-கிழக்கு புனர்வாழ்வு புனரமைப்பு பணிகளை மேற்கொள்ளும் பொறுப்பை உள்ளூர் மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்ற கருத்தை விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகள் வலியுறுத்தியுள்ளதாக கூறப்படுகிறது;

(உ-10)

# கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சாதாரண) மாதிரிப் பரீட்சை -2002


## General Certificate of Education (Ord. Level) Model Examination - 2002

விஞ்ஞானம் - 1
ஒரு மணித்தியாலம்

ஆக்கம்: திருமதி த. முருகையா B.A
(பயிற்றப்பட்ட விஞ்ஞான ஆசிரியை)
மயிலணி சைவ மகாவித்தியாலயம்

கவனிக்க : i) எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
ii) 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (i),(ii),(iii),(iv) என எண்ணிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

(நேற்றைய தொடர்ச்சி..............)

21. 

சுற்றின் சமானத்தடை
i 9Ω  ii 3Ω  iii 1Ω  iv 6Ω

22. 60V 240W எனக்குறிக்கப்பட்டுள்ள மின் குமிழினூடு செல்லும் மின்னோட்டத்தை சரியாகக் காட்டுவது.
i $\frac{240}{60}$ A  ii $\frac{60}{240}$ A  iii 60x 240 A  iv $\frac{60 \times 60}{240}$ A

23. மின்பகுப்பின் மூலம் பிரித்தெடுக்கப்படுவது.
i Fe  ii Pb  iii Zn  iv K

24. இரத்தினக்கல் பட்டைதீட்டப்படும் போது பிரகாசத்தை பெறுவது.
i செல்லும் ஒளி முறிவடைதல்  ii செல் ஒளி முழு உட்தெறிப்பு
iii அடர்த்தி கூடியது  iv விறைப்புத் தன்மையுடையது

25. வீட்டு மின் சுற்றை சரியாக காட்டுவது.
i சேவை உருக்கி → மின்மானி→தலைமையாளி →இடறு ஆளி→பரம்பல்பெட்டி
ii மின்மானி → சே.உ → தலைமையாளி → இடறு ஆளி → பரம்பல்பெட்டி
iii மின்மானி→தலைமையாளி→ சேவைஉருகி → இடறுஆளி→ பரம்பல்பெட்டி
iv சேவைஉருகி → தலைமையாளி→ மின்மானி→ இடறுஆளி→பரம்பல்பெட்டி

26. ஆளியாகப் பயன்படும் இலத்திரனியல் சாதனம்
i கொள்ளளவி  ii திரான்சிஸ்டர்  iii தடையி  iv இருவாயி

27. முளைவகை முறையில் முதன் முதலில் உருவாக்கப்பட்ட அங்கி எது?
i மனிதன்  ii செம்மறியாடு  iii குரங்கு  iv எலி

28. கூர்ப்பு விருட்சத்தின்படி மனிதன் எந்த யுகத்தை சேர்ந்தவன்.
i செனொசோயிக்  ii மீசோசோயிக்  iii பலியோசோயிக்  iv ஆககயோசோயிக்

29. தன்மலட்டுத்தன்மையைக் காட்டும் பூ எது?
i பப்பாசி  ii பட்டிப்பூ  iii கொடித்தோடை  iv வாதமடக்கி

30. சூரிய ஒளி உள்ள போதும் ஒளித்தொகுப்பைச் செய்ய முடியாத தாவரம்.
i மரவள்ளி  ii தென்னை  iii ஐதரில்லா  iv பூஞ்சணம்

31. பின்வருவனவற்றுள் உயிர்ப்பான அகத்துறிஞ்சல் என கருத முடியாதது எது?
i வேர்மயிர்களுள் நீர் புகுதல்
ii சமிபாடடைந்த குளுக்கோசு குருதியினுள்செல்லுதல்
iii வேர்மயிர்களினுள் கனிப்பொருள்செல்லுதல்
iv அயடீன் உப்புக்கள் கடற்சாதாளைகளுள் புகுதல்

32. இறப்பர் பாலில் அடங்கியிருக்கும் கூறு அல்லாதது?
i புரதம்  ii கொழுப்பு  iii ரெசின்  iv சீனி

33. ஒரு தொழிலையோ ஒன்றுக்கு மேற்பட்ட தொழிலையோ நிறைவேற்றவெனச் சிறத்தலடைந்த கலக் கூட்டம்.
i அங்கம் ஆகும் ii இழையம் எனப்படும் iii உறுப்பு எனப்படும் iv தொகுதி எனப்படும்


34. மொட்ரோலக் நீர்மானி பயன்படுவது.
i பசுப்பாலின் அடர்த்தியை கண்டறிவது
ii இறப்பர்பாலிலுள்ள றப்பரின் உலர் நிறையை அறிவதற்கு
iii நீரின் அடர்த்தியை அறிய
iv சிறு நீரின் அடர்த்தியை அறிய

35. குருதி உறைதலை தடுக்கும் எப்பாரின் எதனால் சுரக்கப்படுகிறது.
i சதையி  ii இலங்கர்ஹான் சிறு தீவு  iii ஈரல்  iv குடற்சுரப்பி

36. ஊனுண்ணித் தாவரம் எனக் கருத முடியாதது.
i உலோறந்தசு  ii நெப்பந்திசு  iii துரொ சீரா  iv யூற்றிகுலேரிய

37. வனவிலங்குகளுக்கான அச்சுறுத்தலாக அமையாதது.
i காட்டுத் தீ ஏற்படல்  ii காடழித்தல்  iii வேட்டையாடல்  iv வனப்பாதுகாப்பு

38. நிலைக் குத்தாக மேல் எறியப்பட்ட கல் ஒன்றின் வேகம் 0 ஆகும் வரை அக்கல்லின் இயக்கம் சம்பந்தமாக வரையப்பட்ட சரியான வேகநேர வரைபு எது?




39. ''மோட்டார் வாகனம் செலுத்தும் போது தலைக்கவசம் அணியவும்'' மேற் கூறிய வாசகம் பற்றி சரியானது?
i அரசசட்டம் என்பதால் அணிய வேண்டும்
ii காவல் துறையினர் தண்டப்பணம் அறவிடுவார்கள் என்பதால்
iii அழகாய் இருக்கும் என்பதால் அணிய வேண்டும்
iv வீதி விபத்தில் இருந்து தம்மை பாதுகாக்க அணிய வேண்டும்

40. இறப்பரை வல்க்கனைசுப் படுத்தும் போது எதைச் சேர்த்து வெப்பமேற்ற வேண்டும்.
i கந்தகம்  ii இரும்பு  iii மக்னீசியம்  iv பொஸ்பரஸ்

### விஞ்ஞானமும் தொழில் நுட்பமும் 3மணித்தியாலம்
### பகுதி - II

**முதலாம் வினா உட்பட மேலதிகமாக ஏழு வினாக்களைத் தெரிந்தெடுத்து எட்டு வினாக்களுக்கு விடை எழுதுக.**

01) பின்வரும் பந்தியை வாசித்து கீழே கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

இறப்பரினால் ஆன பொருட்கள் தற்போது பெரும்பாலும் பாவனையிலுள்ளன. இப் பொருட்களை தயாரிப்பதற்கு ஏற்ற வகையில் இறப்பர் ஆனது சிறப்பான இயல்புகளைக் கொண்டுள்ளது.

இறப்பர் தாவரத்தண்டினது மாறிழையத்திற்கு அண்மையிலுள்ள படைகளில் கூடியளவு பாற்கலன்கள் காணப்படுவதையும்வெளியே குறைந்த பாற்கலன்கள் காணப்படுவதையும் அவதானிக்கலாம். பால் வெட்டுவோர் பாறபட்டை என அழைக்கப்படும் மாறிழையப் பகுதிக்கு புறத்தே உள்ள ஒரு மில்லி மீற்றர் தடிப்புள்ள பகுதியே அதிக பாற்கலங்களைக் கொண்டிருப்பதாக கூறுவர். இப்பாற்கலன்கள் தோன்றுவதற்கு முதல், அவை உரியக் கலங்களாக இருக்கும்.

பாற்கலங்களை வெட்டும் போது அவற்றிலுள்ள வீக்க - அமுக்கம் காரணமாகவே பால் வெளியேறுகிறது. இப்பால் நீர், றப்பர், புரதம், சீனி, ரெசின் போன்ற கூறுகளைக் கொண்டிருக்கும்.

பற்றீரியாக்களால் இறப்பர் பால் திரட்சியடையக் கூடியது. இத்திரட்சியை தடுப்பதற்கு திரட்சி நிரோதிகள் பயன்படும். தொழிற்சாலைக்கு எடுத்துச் செல்லப்படும் இறப்பர் பால் பல்வேறு விதமாக பதப்படுத்தப்பட்டு இறப்பர் உற்பத்தி செய்யப்படும் இறப்பரில் சில இயல்புகள் மாற்றியமைக்கப்படுகிறது. இதனை இறப்பர் வல்க்கனைஸ் படுத்தல் என்பர். இறப்பரானது சில கரைப்பான்களில் கரையும் இயல்பு கொண்டது.


I a) இறப்பரின் இயல்புகள் 3 தருக?
b) எப்பகுதி வரை வெட்டு இடப்பட்டால் இறப்பர் மரத்திலிருந்து அதிக பாலைப் பெறலாம்?
c) பாற்கலன்கள் தோன்ற முன் முதலில் தோன்றுபவை எவை?
d) பாற்கலங்களிலிருந்து எதன் காரணமாக பால் வெளியேறும்?

II a) இறப்பர் பாலில் அடங்கும் கூறுகள் எவை?
b) திரட்சி நிரோதிகள் 2 தருக?
c) இறப்பர் பாலைப் பதப்படுத்தி பெறப்படும் இறப்பர் வகைகள் எவை?
d) வல்க்கனைஸ் படுத்தலில் பயன்படும் மூலகங்கள் எவை?

III a) இறப்பர் பால் பழுதடைந்தால் துர் நாற்றம் வீசுவதற்கான காரணம் தருக?
b) இறப்பர் கரையக் கூடிய கரைப்பான்கள் 2 தருக?

02) படத்தில் இருவித்திலைத் தாவரம் ஒன்றின் பூவின் நெடுக்கு வெட்டு முகம் காட்டப்பட்டுள்ளது.

I





1) படத்தில் காட்டப்பட்டுள்ள a, b, c, d, e என்னும் எழுத்துக்களினால் காட்டப்படும் பகுதிகளை முறையே பெயரிடுக?
2) பெண்ணகத்தின் பகுதிகளைக் குறிக்கும் ஆங்கில எழுத்துக்களை குறிப்பிடுக?
3) பூவிலிருந்து பழம் உருவாகுதல் வரை நடைபெறும் பிரதான செயன்முறைகள் எவை?

II a) பதியமுறை இனப்பெருக்கத்தில் பங்கு கொள்ளும் பதியப் பகுதிகள் 4 தருக?
b) இழைய வளர்ப்பினால் கிடைக்கும் அனுகூலங்கள் 2 தருக?
c) பூச்சிகளால் மகரந்தச் செயற்கையடையும் பூக்களின் சிறப்பியல்புகள் 2 தருக?

III a) வித்துக்கள், பழங்கள் ஏன் பரம்பலடைய வேண்டும்?
b) வித்துக்கள் முளைத்தலுக்கு தேவையான காரணிகள் தருக?

03) வானொலியில் ஒலிபரப்பாகும் இனிய பாடல்களை தமது செவி வாங்கி செவிக்கால் வாயூடாக செவி நரம்புகளுக்கு கடத்தப்படுவதால் நாம் அதனை ரசிக்கக் கூடியதாக உள்ளது.

I a) செவிநரம்புகளுக்கு ஒலி அலை கடத்தப்படும் பாதையை ஒழுங்காக தருக?
b) செவிப்பறை பாதிப்படையும் சந்தர்ப்பம் இரண்டு தருக?
c) உடலின் சமநிலை பெற உதவும் செவியின் பகுதி எது?




II a) மேலே தரப்பட்ட அமைப்பை இனங்கண்டு பெயரிடுக?
b) அமைப்பில் காட்டப்பட்டுள்ள a, b, c, d, e, f எழுத்துக்களினால் ஆன பகுதிகளை பெயரிடுக?
c) b யின் அனுகூலம் யாது?

III a) தூண்டல் ஒன்று வாங்கியிலிருந்து விளைவு காட்டிக்குச் செல்லும் பாதையை ஒழுங்காக தருக?
b) நரம்பிணைப்பில் உற்பத்தியாக்கப்படும் இரசாயனப் பதார்த்தம் எது?

04) ஐதரோக் குளோரிக்கமிலம், மாதிரி ஒன்றின் சம கனஅளவுகளை A,B என்னும் இரு சோதனைக் குழாயில் இட்டு அதனுள் முறையே மக்னிசிய உலோகத் துண்டுகளையும்,தூளையும் சம திணிவுகளில் பெற்று குழாய்களில் ஒரே நேரத்தில் சேர்த்து அவ்தானிக்கப்பட்டது. அமிலம் மிகையாகச் சேர்க்கப்பட்டது.


I a) மேற்படி பரிசோதனையின் நோக்கம் என்ன?
b) மிகையாக அமிலம் இடப்பட்டது ஏன்?
c) எக் குழாயில் குமிழிகள் விரைவாகத் தோன்றும்?
d) இக் குழாயில் வேகமாகக் குமிழிகள் தோன்றுவதற்கான காரணம் என்ன?

II
a)மக்னிசியத்திற்கும் ஐதரோக்குளோரிக்கமிலத்திற்கும் இடையே நடைபெறும் தாக்கத்தில்,
அ) தாக்கிகள் எவை?
ஆ) விளைவுகள் எவை?
b) மேற்படி தாக்கத்திற்கான சமப்படுத்திய சமன்பாட்டைத் தருக?
c) 48 கிராம் மக்கினிசியம் ஐதரோக்குளோரிக்கமிலத்தில் தாக்கமுற்று எத்தனை கிராம் வாயு பெறப்படலாம்?

05) பின்வருவனவற்றுள் எவையேனும் ஐந்தினை விளக்குக.
1) செப்புக் கம்பியை உருகிக் கம்பியாகப் பயன்படுத்தக்கூடாது.
2) அலுமீனியமானது இரும்பை விட தாக்குதிறன் கூடியது ஆனால் இரும்பு போன்று அரிப்புக்குள்ளாவதில்லை.
3) நீரிழிவு நோயாளிக்கு வழங்கப்படும் இன்சுலின் வாயினூடாகச் செலுத்தாது நேரடியாக ஊசி மூலம் குருதியினுள் செலுத்தப்படும்.
4) சாதாரண கறியுப்பு வளியில் திறந்து வைக்கும் போது கசிகிறது,மேசையுப்பு அப்படியில்லை.
5) எண்ணெய் ஊற்றப்பட்ட தரையில்நடந்த ஒருவர் வழுக்கி விழுந்தார்.
6) இருவித்திலைத் தாவரத்தை ஒட்டுதல் மூலம் இனம்பெருக்கலாம் ஆனால் ஒருவித்திலைத் தாவரத்தை இனப்பெருக்க முடியாது.

(06)
(A) பூண்டுத் தாவரம் ஒன்றின் ஆவியுயிர்ப்பு வீதத்தை அளவிட படத்தில் காட்டிய அமைப்பு ஒன்றைத் தரம் 10 மாணவர்கள் அமைத்தனர்.
i) இவ்வமைப்பினைத் தயார் செய்யும் போது ஏற்பட்ட சிரமங்கள் இரண்டு தருக?
ii) நீர் குறிப்பிட்ட சிரமங்களை எவ்வாறு தவிர்த்துக் கொண்டீர்?
iii) வளிக்குமிழ் மயிர்த்துளைக்குழாயுள் விடப்பட்டதேன்?
iv) இப் பரிசோதனையின் கருதுகோள் என்ன?
v) இப் பரிசோதனையூடாக அறியக் கூடிய பிறிதொரு தாவரச்செயற்பாடு என்ன?
vi) ஆவியுயிர்ப்பைத் தடுக்க வறள் நிலத் தாவரங்கள் கொண்டுள்ள இசைவாக்கங்கள் இரண்டு தருக?
(B) i) ஒளித்தொகுப்பின் பக்க விளைபொருள் என்ன?
ii) இவ் விளைவை இனங்காண நீர் மேற்கொள்ளும் பரிசோதனையை படிமுறையாக தருக?
iii)ஒளித் தொகுப்பு பிரதான விளைபொருளை அறிவதற்கு பயன்படுத்தும் இரசாயனப் பதார்த்தம் என்ன?

வினா 6 (A) ⇨ இற்கான படம்




(தொடரும்........)

## எதிர்க் கட்சிகள் ஒன்றுபடாதவரை

# மாற்று அரசமைப்பது என்ற பேச்சுக்கே இடமில்லை!

## லங்கா சமசமாஜக் கட்சி பட்டி வீரக்கோன் தெரிவிப்பு

(கொழும்பு)

**தற்போதைய அரசியல் சூழ்நிலையில் மாற்று அரசு ஒன்றை அமைப்பது பொருத்தமானதாக இருக்காது என லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவர் பட்டி வீரக்கோன் தெரிவித்துள்ளார்:**

கொழும்பு செய்தி நிறுவனம் ஒன்றுக்கு பேட்டியளிக்கும் போதே வீரக்கோன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்

அவர் அப்பேட்டியில் தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில்;

மாற்று அரசு ஒன்று அமைக்கப்படுவதாயின் அது தொடர்பில் பொதுஜன ஐக்கிய முன்னணி உட்பட எதிர்க்கட்சிகள் மத்தியில் பொதுவான நிலைப்பாடு இருக்க வேண்டும்.

பிரதான எதிர்க்கட்சியான பொதுஜன ஐக்கிய முன்னணி கூட தனக்கே உரித்தான திடமான கொள்கைகளை கொண்டிருக்கவில்லை:

இவ்வாறான ஸ்திரமற்ற நிலையில் மாற்று அரசாங்கத்தை அமைக்க முடியாது என்று குறிப்பிட்டார்.

இச் சந்தர்ப்பத்தில் பொது ஜனஐக்கிய முன்னணிமக்கள் விடுதலை முன்னணியுடன் கூட்டு அமைக்க மாட்டாது என்பதையும் பட்டி வீரக்கோன் சுட்டிக்காட்டியுள்ளார்;

இதுஇவ்விதமிருக்க, அரசமைப்புத் திருத்தம் சம்பந்தமாக உயர்நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பினால் அரசுக்கு ஏற்பட்டுள்ள இக்கட்டான நிலைமையைச் சாதகமாகப் பயன்படுத்தி லக்ஷ்மன் கதிர்காமர் தலைமையில் புதிய அரசொன்றைஅமைக்கபொது ஜனஐக்கிய முன்னணி முயற்சித்து வருவதாகவும்,

இதற்கு ஆதரவு திரட்டும் பணி ஆரம்பமாகியிருப்பதாகவும் செய்திகள் வெளியாகியிருப்பது குறிப்பிடத்தக்கது;

எது எவ்வாறிருப்பினும், இன்று சபாநாயகரால் பாராளுமன்றத்தில் வெளியிடப்படவுள்ள18,19வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டங்கள் தொடர்பான உயர் மன்றத் தீர்ப்பே நாட்டின் அடுத்த கட்டஅரசியல் நிலையைத் தீர்மானிக்கப் போவது குறிப்பிடத்தக்கது.

(உ-8)

## மின்சாரவசதி

(கிளிநொச்சி)

கனடாவில் உள்ள தமிழ்ச் சிறார்களின் நலன் காக்கும் நிதியம் வன்னிப் பிரதேசங்களில் இயங்கும் சிறுவர்களின் இல்லங்களுக்கு மின் வசதியை ஏற்படுத்திக் கொடுக்க முன்வந்துள்ளது;

அமெரிக்கா, கனடா பேரன்ற இடங்களில் உள்ள தமிழர் புனர்வாழ்வு கழக அனுசரணையுடன் இருமாத காலத்துக்குள் இத்திட்டம் அமுல் செய்யப்படவுள்ளது;

(உ-8)

## தப்பியோடிய படையினரை கைது செய்ய உத்தரவு

இராணுவத்தில் இருந்து தப்பிஓடிய சுமார் 50 ஆயிரம் படையினரை கண்டுபிடித்து கைது செய்யுமாறும் பொலிஸ்மா அதிபர் ரீ.ஆனந்தராஜா உத்தரவிட்டுள்ளார்.

தப்பிஓடிய படையினரை தேடும் நடவடிக்கையை உடன்மேற்கொள்ளுமாறும் பொலிசாரிடம் பணிப்புரை விடுத்துள்ளார்;

இலங்கையில் நடைபெறும் பாரிய குற்றச் செயல்களிற்கு இராணுவத்தில் இருந்துதப்பியோடியவர்களே முக்கிய காரணம் என்று கூறப்படும் குற்றச்சாட்டுகளிற்கு அமைவாக இத்தேடுதல் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார்:

(உ-10)

## பத்தேகம அமைப்பாளராக புதியவர் நியமனம்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பத்தேகம தொகுதியின் புதிய அமைப்பாளராக பாராளுமன்ற உறுப்பினர் அகந்த சிறிபாலாவை நியமிக்க கட்சி உத்தேசித்துள்ளதாக கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை, இப்பதவிக்கான விண்ணப்பங்கள் அடுத்த மாத ஆரம்பத்தில் கோரப்படும் என கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபாலா சிறிசேன தெரிவித்துள்ளார்.

தொழில்நுட்ப மின்சார சபை சீர்திருத்த சட்டமூலம் பற்றிய பாராளுமன்ற வாக்கெடுப்பின் போது, கலந்து கொள்ளாதபொதுஜனஐக்கிய முன்னணி உறுப்பினர்களிடமிருந்து விண்ணப்பம்கோருவதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கட்சியின்பத்தேகமதொகுதியின் அமைப்பாளர் றிச்சட் பத்திரன பதவி விலக்கப்பட்டதையடுத்தே புதியவர் நியமிக்கப்படவுள்ளார்.

(உ- 8)

## வெற்றிக் களிப்பில் சதாம் ஹூசைன் கைதிகளுக்கு பொது மன்னிப்பு

(பக்தாத்)

ஈராக்கில் கடந்த வாரம் இடம் பெற்ற ஜனாதிபதித் தெரிவு சர்வஜன வாக்கெடுப்பில 100 சத வீத வாக்குகளால் மீண்டும் சதாம் ஹூசைன் வெற்றி பெற்றுள்ளார்;

தனக்குக் கிடைத்த ஏகோபித்த வெற்றியினைக் குறிக்கும் முகமாக சிறையில் வாடும் அனைத்து அரசியல் கைதிகளுக்கும் ஜனாதிபதி சதாம் ஹூசைன் பொது மன்னிப்பு வழங்கியுள்ளார்.

இப் பொது மன்னிப்பு மூலம் 1000 இற்கும் மேற்பட்ட கைதிகள் விடுதலையடைந்து மகிழ்ச்சியில் குதூகலித்தனர்;

சதாம் ஹூசைன் தனது 23 வருட ஆட்சிக் காலத்தில் கைதிகளுக்குப் பொது மன்னிப்பு வழங்கியுள்ளமை இதுவே முதற்தடவையாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

(சு-04)

## இஸ்ரேலின் கூட்டணிக் கட்சி அரசாங்கத்திடமிருந்து விலகல்

### பாதுகாப்பு அமைச்சர் அறிவிப்பு

(இஸ்ரேல்)

இஸ்ரேலின் கூட்டணிக் கட்சி அரசாங்கத்திலிருந்து நீங்குவது பற்றி ஆலோசித்து வருவதாக அந்நாட்டுப் பாதுகாப்பு அமைச்சர் பென்டமின் பென் எலியேசர் தெரிவித்துள்ளார்.

மேற்குக் கரை குடியேற்றங்களிலிருந்து யூதக் குடிகளை வெளியேற்றியதன் காரணமாக இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் கண்டனத்திற்குள்ளானார்.

இதனால் இவரின் கருத்துக்கள் இவ் விடயம் தொடர்பாக கூட்டணிக்குள் பிளவுகள் ஏற்பட்டிருப்பதைக் காட்டுகின்றன.

இதேவேளை நேற்று முன்தினம் ஹவா, ஜனாப என்ற குடியிருப்புகளில் இருந்து மக்கள் வெளியேற்றப்பட்ட போது, இராணுவத்தினர், யூதரது புனிதத்தன்மையை சீர் குலைப்பதாகக் கூட்டணி அங்கத்தவர்கள் குறை கூறினார்கள்;

இதனாலேயே கூட்டணிக் கட்சி தமது அரசிடமிருந்து நீங்குவது குறித்து ஆலோசித்து வருகின்றது எனத் தெரிவித்துள்ளார்.

(சு-04)

## பாகிஸ்தானுடனான பேச்சு ஆரம்பிப்பதில் தாமதம்

(இஸ்லாமாபாத்)

எல்லை கடந்த பயங்கரவாதம் இன்னும் தொடருவதனால் பாகிஸ்தானுடனான பேச்சுவார்த்தை உடனே ஆரம்பிப்பதற்கான சூழ்நிலை இல்லையென பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பானான்டஸ் தெரிவித்துள்ளார்.

பெங்ளூரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், எல்லையில் இருந்துதமதுபடைகளை விலக்கிக் கொண்ட போதிலும் ஊடுருவல்கள் தொடர்வதாக குறிப்பிட்டார்.

யுத்த நிறுத்தம்எந்தவகையிலும் இடம்பெறவில்லையென்றும்,

எம்மைத் தாக்கும் போது எமதுபாதுகாப்பை எந்தவகையிலும் குறைக்கமாட்டோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்;

(சு-02)

### வடகொரியாவில் பேச்சு வார்த்தை

(பியோங்யாங்)

வடகொரியாவும், தென் கொரியாவும்உத்தியோக பூர்வ பேச்சுவார்த்தைகளை நேற்று ஆரம்பித்துள்ளன. அணு ஆயுதங்கள் தம்மிடம் இருப்பதாக ஏற்றுச் கொண்டதையடுத்து இடம்பெறும்முதலாவதுபேச்சுவார்த்தை இதுவாகும்.

வடகொரியாவில் இடம் பெறும் இப்பேச்சுவார்த்தையில் தென்கொரியா சார்பாக அந்நாட்டின் ஐக்கிய அமைச்சர் ஜியோங்யீரிங் தலைமையிலான அமைச்சரவைக்குழு ஈடுபட்டுள்ளது.

இப்பேச்சுவார்த்தையின் போது அணு ஆயுதத்திட்டங்களைக்கைவிடுமாறு வடகொரியாவை வலியுறுத்தப்போவதாகத் தென்கொரியா கூறியுள்ளது.

(சு-2)

## கோபி அனானிற்கு சிவிலியன் விருது

(பிஷ்கெக்)

மத்திய ஆசிய நாடான கிர்கிஸ்தானின் உயரிய 'சிவிலியன் விருது' ஐக்கிய நாடுகளின் செயலர் கோபி அனானிற்கு வழங்கப்பட்டுள்ளது.

கோபிஅனான், இப்பிராந்தியத்திற்கு முதன் முதலாக பயணம்மேற்கொண்டுள்ளதோடு ஆப்கானிஸ்தானிற்கு அருகேயுள்ளபயங்கரவாதத்திற்கெதிரான நடவடிக்கைகளில் பங்கேற்று, இப் பிராந்தியம் சர்வதேச அளவில் முக்கியத்துவம் பெறுவதற்கு காரணமாக இருந்தவர். எனவே அவரது திறமையைப் பாராட்டி அவருக்கு இவ் உயரிய விருது வழங்கியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது;

(சு-02)

## படைகளைதிருப்பிஅழைக்க இஸ்ரேல் இணக்கம்

(ரெலஅவிவ்)

மேற்குக்கரை நகரமான கெப்ரோனில் இருந்து ஒரு தொகுதிப்படைகளை திருப்பி அழைத்துக் கொள்ள இஸ்ரேல் இணங்கியுள்ளது. இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர் முன் வைத்த திட்டத்திற்குப் பிரதமர் ஏரியல் சரோன்அங்கீகாரம் வழங்கியதையடுத்தே, இவ்வாறுஒரு தொகுதிப் படையினர் திருப்பி அழைக்கப்படவுள்ளனர்;

கடந்த ஜூன் மாதம் இடம் பெற்ற பலஸ்தீனத் தற்கொலைக் குண்டுத்தாக்குதல்களையடுத்து மேற்கு கரையிலுள்ள 7 நகரங்களை இஸ்ரேல் முற்றுகையிட்டிருந்ததும், அதில் பெத்தலகேம் நகரில் இருந்து மட்டுமே இஸ்ரேலியப் படையினர் விலகியிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

(சு-02)

## கொலம்பியாவில் மேஜர் ஒருவர் உட்பட மூவர் பலி

(பொஹோரா)

கொலம்பியாவில்இடதுசாரி பாக்கெரில்லா சந்தேக நபர்கள் மேஜர் ஒருவரையும், மற்றும் 3பேரையும் சுட்டுக் கொன்றுள்ளனர்.

இவர்கள் பயணம் செய்த வாகனத்தை தடுத்து நிறுத்திய கெரில்லாக்கள் இவர்களை வெளியே இழுத்துச்சுட்டுக்கொன்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நாட்டிலுள்ள அனைத்து மேஜர்களும் தமது பதவிகளை இராஜினாமாச் செய்ய வேண்டும்என்றும்- அவ்வாறு இராஜினாமா செய்யப்படாவிட்டால் சுட்டுக்கொல்லப் படுவர் என்றும் பாக்கெரில்லாக்கள் மிரட்டி வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(சு-04)

உற்றநோய் நீக்க உறா அமை முற்காக்கும்
பெற்றியார்ப் பேணிக் கொளல்.
குறள்

# வலம்புரி

## ஹெல்கீசனின் யாழ். வருகை

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே சமாதான ஏற்பாட்டாளராகச் செயற்படும் நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீசன் தலைமையிலான குழுவினர் இன்று யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளனர்.

சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு தாய்லாந்தில் முதற்கட்டப் பேச்சுக்கள் நடைபெற்று முடிந்த நிலையில் முதன் முறையாக நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் விடார்ஹெல்கீசன் இன்று யாழ்ப்பாணம் வருவது குடாநாட்டில் ஏற்பட்ட யுத்த அனர்த்தங்களை நேரில் காண்பதற்கு நல்லதொரு சந்தர்ப்பமாக அமையும்.

மக்களின் இடம் பெயர்ந்த வாழ்க்கை, தென்மராட்சியில் அரச படையினரின் பல்குழல் தாக்குதலால் ஏற்பட்ட பேரழிவுகள், மிதிவெடிப் பிரச்சினைகள், மருத்துவப் பின்னடைவுகள் போன்றவற்றை அமைச்சர் விடார் ஹெல்கீசன் நேரில் அவதானிப்பது சமாதானப் பேச்சுக்களில் அவை பிரஸ்தாபிக்கப்படுவதற்கு ஏதுவாக அமையும். எனினும் யாழ்ப்பாணம் வருகின்ற பிரதி அமைச்சர் ஹெல்கீசனுக்கு யாழ். குடாநாட்டின் நிலைபரம் குறித்து போதிய விளக்கமளிக்கப்படுமா? என்பது கேள்விக்குரியது.

கடந்த காலங்களில் வெளிநாட்டுப் பிரதிநிதிகள் யாழ். குடாநாட்டிற்கு விஜயம் செய்த போதெல்லாம் அவர்களுக்கு உண்மை நிலை விளக்கப்படாததுடன்படுமோசமாகப் பாதிப்படைந்த இடங்களும் காண்பிக்கப்படவில்லை.

ஏதோ வந்தவர்களை வரவேற்பதும் மாலை அணிவிப்பதுமே தமது நிர்வாகத்திறனை வெளிப்படுத்தும் என்பதுபோல் யாழ்ப்பாணத்து அதிகாரிகளும், அரசியல்வாதிகளும் நடந்து கொண்டனர். இதனால் வந்தவர்களுக்கு உண்மை நிலையை எடுத்துக்கூற முடியாதுபோயிற்று.

எனவே கடந்த காலங்களில் நாம் கடைப்பிடித்த மாலை மரியாதைகளை விடுத்து மக்கள் எதிர்நோக்குகின்ற அடிப்படைப் பிரச்சினைகள், மீள்குடியேற்றத்தின் அவசியம், அகதிமுகாம்களின் அவல வாழ்க்கை போன்றவற்றை எடுத்துக்கூற வேண்டும்.

# குழந்தைகளுக்குப் போஷாக்குள்ள உணவுகளை

# சிறிது சிறிதாக அதிகரித்து ஊட்டுவதே சிறந்தது

## மருத்துவ விளக்கம்

குழந்தைகளுக்கு நான்கு மாதங்கள் வரை தாய்ப்பால் மட்டுமே போதுமானது. இக்காலத்தில்தாய்மார் போஷாக்குள்ள உணவுகளை உண்ண வேண்டும். அதனால் அதிக பால் சுரக்கும். முயற்சித்து முடியவில்லையென்றால் மாத்திரம் குழந்தைகளுக்கான மாப்பாலை அல்லது பசுப்பாலை ஊட்டுங்கள தாய்ப்பால் எத்தனை தடவை ஊட்டுவது, மாப்பால் எத்தனை ஊட்டுவது என்று கணக்கு வைக்காதீர்கள். ஒவ்வொரு நேரமும் தாய்ப்பாலையே ஊட்டுங்கள். அது போதா விட்டால் மாத்திரம் தேவைக்கு ஏற்ப மாப்பாலை அல்லதுபசுப்பாலைக்கொடுக்க வேண்டும். இப்படிச் செய்வதன் மூலம் தாய்ப்பால் சுரப்பதைக்குறையாமல் பார்த்துக் கொள்ள முடியும்.

### பழச்சாறு

குழந்தைக்கு நான்கு மாதத்தில் பழச்சாற்றை அறிமுகப்படுத்தலாம். முதலில் தோடம் பழச்சாறு கொடுக்கலாம். உடனே வெட்டிப் பிழிந்த தோடம்பழச்சாற்றில் ஒரு கரண்டி மட்டும் ஆரம்பத்தில் கொடுங்கள். சீனியோ நீரோ சேர்க்க வேண்டியதில்லை. வெறும் சாறாகவே கொடுக்கலாம். காலை 8, 9 மணியளவில் இதைக் கொடுக்கலாம். ஒரு தேக்கரண்டியில் ஆரம்பித்து படிப்படியாக அதிகரியுங்கள். சிறிது காலத்தில் அரைப் பழத்தின் சாற்றைக் கொடுக்கக் கூடியதாக இருக்கும்.

தோடம்பழத்திற்குப் பதிலாக எலுமிச்சம் பழச்சாறு கொடுக்கலாம். இதில் புளிப்பு அதிகமாக இருப்பதால் சிறிது கொதித்து ஆறிய நீரும், சீனியும் சேர்த்துக் கொடுக்க வேண்டும். பப்பாசிப் பழத்தைச் சாறாக கொடுக்கலாம். முன்பு போல ஒரு தேக்கரண்டியில் ஆரம்பித்துப் படிப்படியாக அதிகரிக்க வேண்டும். இரண்டு வாரங்களுக்குப் பின் பப்பாசிப்பழத்தை மசித்து உண்ணக் கொடுங்கள் திராட்சைப் பழங்களும் குழந்தைக்குக் கொடுக்க உகந்தவை. நல்ல பழங்களாகத் தேர்ந்தெடுத்து நன்கு கழுவிய பின்னரே சாறாக்க வேண்டும் நசித்து பழுதடைந்த பழங்களையும் தண்டு கழன்ற பழங்களையும் கொடுக்க வேண்டாம் வாழைப்பழமும் கொடுக்க உகந்தது. ஏனையபழங்களைப் போல கொடுக்கலாம்.

### பழங்கள் குளிர்ச்சியானவையா?

பழவகைகள் குளிர்ச்சியானவை. இருமல்சளியை ஏற்படுத்தும் எனப் பெற்றோர் பலரும் பயப்படுவதுண்டு. இது தவறான நம்பிக்கையாகும. இவற்றிற்கு எந்தவிதமான ஆதாரமும்கிடையாது. உலகின் பெரும்பாலான நாடுகளில் குழந்தைகளுக்கு முதலில் பழச்சாற்றை பழமசியலைத் தான் மேலதிக உணவாகக் கொடுக்கிறார்கள். இதனால் அக்குழந்தைகள் நோய்வாய்ப்படவில்லை. மாறாக நல்ல ஆரோக்கியமாகவே இருக்கிறார்கள்.

அத்துடன் பழ வகைகளில் நிறைய விற்றமின்கள் அதாவது உயிர்ச்சத்துகள் இருக்கின்றன. முக்கியமாக விற்றமின் Eயும், Aயும் நிறைய இருக்கின்ற. இவைதடிமன் காய்ச்சல் வருவதைத் தடுக்கும் ஆற்றல் கொண்டவை என்றே மருத்துவ ஆராய்ச்சிகள் கூறுகின்றன.

## டாக்டர் எம். கே. முருகானந்தன்

அத்துடன் பழவகைகளில் நிறைய நார்ப்பொருளும் உள்ளது இது மலச் சிக்கல் ஏற்படாது தடுத்துக் குழந்தைக்குச்சுலபமாகமலம்வெளியேறுவதை உறுதிப்படுத்தும். எனவே எந்தவிததயக்கமுமின்றிப் பழவகைகளைக்குழந்தைகளுக்குக் கொடுக்கலாம்.

### வேறு கெட்டியானஉணவுகள்

நான்கு மாதத்தில்குழந்தையின் சத்துணவுத் தேவை அதிகரிக்கின்றது. தாய்ப்பால் மாத்திரம்போதுமானதல்ல. எனவேதான்மேலதிக உணவுகளை அறிமுகப்படுத்த வேண்டியுள்ளது. ஆனால் குழந்தைக்கு மேலதிக உணவென்பது ஒருபுதிய அனுபவம். குழந்தை அதை விரும்பி ஏற்றுக் கொள்ளும் வண்ணம் சிறிய அளவில் ஆரம்பித்து சிறிது சிறிதாக அதிகரியுங்கள பதில் உணவை ஒரு வாரம்வரை தொடர்ந்து கொடுத்து குழந்தை அதற்குப் பழக்கப்பட்ட பின் இன்னுமொரு உணவை ஆரமபியுங்கள். திட உணவுகளை ஆரம்பிக்கும் நேரத்தில் நீங்கள் எவ்வளவு ஊட்டுகின்றீர்கள் என்பது முக்கியமானது அல்ல. அதைக் குழந்தை எவ்வளவு தூரம் விரும்புகின்றது என்பதே முக்கியமானதாகும்.

### அரிசிக் கஞ்சி

அரிசிக் கஞ்சி அல்லது பாயாசம் ஆரம்பத்தில் கொடுப்பதற்கு ஏற்றதாகும். எமது வழமையான உணவு சோறு என்பதால் குழந்தைக்கு அரிசிக் கஞ்சியை முதலில் அறிமுகப்படுத்துவது நல்லது. முதலில் வடித்த கஞ்சியில் ஒரு அவுன்ஸ் அளவு கொடுங்கள். கொஞ்சம் கொஞ்சமாக அதிகரித்துப்பின் 3 தொடக்கம் 4அவுன்ஸ் கஞ்சி கொடுக்கவும். ஆரம்பத்தில் அதில் கட்டிகள் இல்லாமல் திரவமாக இருக்கும்படி பார்த்துக் கொள்ளுங்கள். சில நாட்களின் பின் சோற்றைமசித்து, வடித்துக் கொடுங்கள். 5மாதமளவில் மசித்த சோற்றுடன் கலந்த கஞ்சியை வடிக்காமலே கொடுக்கலாம். ஆறு மாதமளவில் நன்கு கரையக் காய்ச்சிய சோற்றை நேராகவே கொடுக்கலாம்.

பாலுக்குப் பழகியிருந்த குழந்தை, திட உணவை ஏற்க மறுத்தால், அதற்காகக் கவலைப்படாதீர்கள். கட்டாயப்படுத்தி ஊட்டாதீர்கள். புரிந்துணர்வோடு அணுகுங்கள். குழந்தை உணவைத் துப்பும் போது அச்சுவை அதற்குப் பிடிக்கவில்லை என எண்ணாதீர்கள். உணவை நன்றாக மெல்லுவதாலும், நாக்கினால் ருசியை அனுபவிப்பதாலும் கூடத் துப்பலாம்.

உணவை உங்கள் குழந்தை விரும்பவில்லை என்பதற்காக அதிகமான இனிப்பையும், உப்பையும் சேர்த்து ஊட்ட முயலாதீர்கள். ஏனெனில் குழந்தையின் சுவை உறுப்புகள், வளர்ந்தவர்களுடையவற்றை விட நன்றாக வேலை செய்யக் கூடியவை. எனவே அதிகப்படியான இனிப்பும், உப்பும் தேவையில்லை. ஆரோக்கியத்திற்கு ஏற்றதுமல்ல.

### தயாரிக்கப்பட்ட தானிய மா உணவுகள்

இவற்றைத் தவிரப் பலவிதமான தானிய மாப்பைக்கற்றுகள் தயாரிக்கப்பட்ட உணவுகளாக விற்பனைக்குக் கிடைக்கின்றன. திரிபோஷா, அரச வைத்தியசாலைகளில் போஷாக்குக் குறைந்த குழந்தைகளுக்கு இலவசமாக வழங்கப்படுகின்றது. ஏனைய பல வகை தானிய மா ஆகாரங்கள் (cereats) விற்பனைக்குக் கிடைக்கின்றன. எமது முன்னோர்கள் பொரித்த அரிசி மாவைக் கொடுத்தார்கள். அதையே கொடுங்கள். வாங்குவதாயிருந்தால் நல்லதாக இருக்கிறதா என்பதை அவதானித்து வாங்குங்கள். விலை உயர்வானதுதான் நல்லது என்று எண்ணாதீர்கள். விளம்பரத்திற்குச் செலவிடப்படும் பணமும் உங்களிடம் தான் அறவிடப்படுகிறது என்பதை மறந்து விடாதீர்கள். எனவே முக்கியமாகத் தரமானதாகப் பார்த்து வாங்குங்கள்.

ஆரம்பிக்கும் போது ஒரு தேககரண்டியில் ஆரம்பியுங்கள். ஒரு தேக்கரண்டி தானியப் பவுடரைச் சிறிது சுடுநீருடன் கலந்து கொடுங்கள். அல்லது சுடு பாலுடனும் கலந்து கொடுக்கலாம். குழந்தைக்கு ஆறு மாதம் ஆகும் போது ஆறு தேக்கரண்டி அளவு தானியப் பவுடரைக் கொடுக்கக் கூடியதாக இருக்கும். ஐந்து மாதமளவில் ரஸ்க் கொடுக்க ஆரம்பியுங்கள். ஆரம்பத்தில் தூளாக்கிக் கொடுங்கள். பின் முழுமையாகவே கொடுக்கலாம்.

ஐந்து மாதத்தில் சூப் கொடுககலாம், ஆரம்பத்தில் கரட், உருளைக்கிழங்கு, வெங்காயம், தககாளி சேர்த்து சூப் செய்யுங்கள், ஒரு வாரத்தின் பின் சூப்பில் இலைவகைகளையும் சேருங்கள். அதன் பின் பயிற்றை, போஞ்சி, பூசணி, லீக்ஸ் போன்றவற்றையும சேருங்கள். ஓரிரு வாரங்களின் பின் பருப்பு, பயறு, கௌபீ ஆகியவற்றையும சூப்பில் சேர்க்கலாம். மீன் அலலது இறைச்சியை ஆறு மாதத்தின் பின் சூப்பில் சேருங்கள். ஆறு மாதமளவில் குழந்தையின் சூப்பிற்குச் சுவையையும், சத்தியையும் கொடுப்பதற்காகச் சிறிதளவு பட்டர், மாஜரின் அல்லது தேங்காயெண்ணெய் சேர்க்கலாம. இந்நேரத்தில் பாணில் அல்லது ரஸ்கில் சிறிது பட்டர் அல்லது மாஜரினைப் பூசிக் கொடுக்கலாம.

## தினசரி தியானம்

### அகிம்சை

அகிம்சை என்பது ஒருநாளில் நிலைநாட்டப்படக் கூடிய செயல் அல்ல. மேலும் மேலும் முயற்சித்து நீங்கள் வெற்றிகாணலாம். ஆன் மாவில் ஒருமையை உணருங்கள் தீமைகளைப் பார்க்காதீர்கள்; ஒருவர் ஒரு சிறு தவறு செய்துவிட்டால் அவரைப் பழிவாங்கவோ, அல்லது அவரிடம் சச்சரவு செய்யவோ வேண்டாம், அமைதியாயிருங்கள், அமைதிக்கும் ஒருமைக்குமான எண்ணங்கள் பிரகாசிக்கும்படி செய்யுங்கள்: தவறு செய்பவரிடமும் இறைவன் இருக்கிறான், பிரச்சினை தானாகத்தீர்ந்துவிடும்;

**சுவாமி சிவானந்தர்**

முகாமைத்துவ டிப்ளோமா

## சித்தியடைந்தோரின் பெயர்கள் வெளியாகின

(யாழ்ப்பாணம்)

முகாமைத்துவ டிப்ளோமா கற்கை நெறி இறுதிப் பரீட்சைக்குத் தோற்றிய இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்தியக் கிளைப் பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன.

சித்தியடைந்தவர்களின் பெயர்களை யாழ். பிராந்தியக் கிளையில் பார்வையிடலாம் எனவும்,

இவர்களுக்கான பட்டமளிப்பு விழா அடுத்த மாதம் 16 ஆம் திகதி கொழும்பில் இடம்பெறவுள்ளதால் அதற்கான சான்றிதழ் படிவத்தை உடன் அனுப்புவதற்சேற்ற நடவடிக்கை எடுக்குமாறும் இயக்குநர் ச. ஆ. ஞானேந்திரன் கேட்டுள்ளார். (உ)

## முதியவர் தற்கொலை

நோயின் கொடுமைதாங்காத வயோதிபர் நஞ்சருந்தி தற்கொலை செய்துகொண்ட சம்பவம் நேற்று கரணவாய் தெற்கில் இடம்பெற்றுள்ளது.

நா. சணபதிப்பிள்ளை (வயது 68) என்ற முதியவரே இவ்வாறு தற்கொலைசெய்து கொண்டவராவார். (உ-14)

# குற்றச்செயல்களை அறிவிக்க செய்தியாளர் மாநாடு

## பொலிஸ்மா அதிபர் அறிவிப்பு

(கொழும்பு)

ஊடகத்துறையுடன் சுமுகமான தொடர்புகளை ஏற்படுத்தவும் பொதுமக்களை பாதிக்கும் சிக்கலான பிரச்சினைகள் பற்றி தெரிவிக்கவும் வாரம் தோறும் செய்தியாளர் மாநாட்டை நடத்துவதென்று புதிய பொலிஸ் மா அதிபர் தீர்மானித்துள்ளார். கொழும்பு கெப்பிட்டிபொல மாவத்தையில் ஊடகத்துறையினின் நிகழ்வொன்றில் கலந்து கொண்ட போதே அதனைத் தெரிவித்தார்.

பொதுமக்களைப் பாதிக்கும் குற்றச் செயல்கள் போன்ற முக்கிய விடயங்களை ஒழுங்கான முறையில் மக்களுக்கு அறிவித்துக் கொள்ளுதல் அவசியமாகும். இதற்காக பொலிஸ் தலைமையகத்தில், குற்றப்பிரிவு பிரதி பொலிஸ்மா அதிபர் தலைமையில் செய்தியாளர் மாநாடு நடைபெறும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ந)

# சட்டமா அதிபரினால் மூன்று வழக்குகள் வாபஸ்

(கொழும்பு)

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த மூன்று வழக்குகளைச் சட்டமா அதிபர் திணைக்களம் வாபஸ் பெற்றுள்ளது. இவ்வழக்குகள் வாபஸ் பெறப்பட்டதையடுத்து ஆறு சந்தேக நபர்களை விடுதலை செய்யுமாறு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தமிழர் விடுதலைக்கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர் தங்கத்துரையின் படுகொலை சம்பந்தமான வழக்கு, அலரிமாளிகை, உலகவர்த்தக நிலையம் என்பன பற்றி விடுதலைப்புலிகளுக்கு தகவல்களை வழங்கினார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் தாககல் செய்யப்பட்ட வழக்கும், 1999ம் ஆண்டு இடம் பெற்ற குண்ட வெடிப்புச் சம்பந்தமான வழக்குமே வாபஸ் பெறப்பட்டவையாகும்.

நேற்று விடுதலைசெய்யப்பட்டோர் விபரம் வருமாறு:

மாணிக்கம் முருகானந்தன், சற்குணநாதன் நிஜந்தன், சிவப்பிரகாசம் அகிலரூபன், இரத்தினம் யோகாம்பாள்.

அலரி மாளிகை உலகவர்த்தகமையம் ஆகியவற்றை உளவு பார்த்ததார் என்ற சந்தேகத்தின் பேரில் விளக்கமறியல் வைக்கப்பட்டிருந்த கிருஷ்ணமூர்த்தி, ரவீந்திரராஜ் ஆகியோரே விடுவிக்கப்பட்டவர்களாவர். (ம)

# மேல் மாகாணத்தில் கடும் மழை - பெருவெள்ளம்

(கொழும்பு)

நாட்டில் தற்போது பெய்து வரும் பெருமழை காரணமாக மேல்மாகாணத்தின் பல பகுதிகள் நீரில் மூழ்கி உள்ளது.

கொழும்பு, நீர்கொழும்பு, களுத்துறை, வத்தளை, போன்ற பிரதேசங்கள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளதுடன், பல வீதிகள் நீரில் மூழ்கியிருப்பதால் போக்குவரத்தில் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வத்தளையில் ஆயிரத்துக்கு மேற்பட்ட குடும்பங்களும் பாணந்துறையில் 500க் குடும்பங்களும் தமது சொந்த வீடுவாசல்களை விட்டு வெளியேறி பாதுகாப்பான இடங்களுக்குச் சென்றுள்ளன.

களனி கங்கை, கலு கங்கை ஆகியவற்றின் நீர்மட்டங்கள் உயர்ந்திருப்பதாகவும் தொடர்ந்தும் அங்கு பெரும்மழை பெய்து வருவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)


## மரண அறிவித்தல்

### வைத்திலிங்கச்செட்டியார் கந்தப்பச்செட்டியார்

(பரம்பரை உரிமையாளர், தர்மகர்த்தாவும் முகாமையாளரும் . வண்ணை வைத்தீஸ்வரன் கோவில்)
(வண்ணைச் சிவன் கோவில்)

வண்ணைச் சிவன் கோவிலின் பரம்பரை உரிமையாளர், தர்மகர்த்தாவும், முகாமையாளருமான உயர்திரு.வை. கந்தப்பச் செட்டியார் அவர்கள் நேற்று 21.10.2002 அன்று தஞ்சாவூர் இந்தியாவில் காலமாகிவிட்டார். அன்னார் வைத்திலிங்கம்செட்டியார் கண்ணம்மா ஆச்சி ஆகியோரின் சிரேஷ்ட புத்திரனும், சரோஜா ஆச்சியின் அன்புக் கணவரும்,அமரர் முத்துக்காயாரோகணம் செட்டியார், சுந்தரலிங்கம் செட்டியார், மங்களாம்பாள், அமரர் ஜெகதாம்பாள், தையலாம்பாள் ஆகியோரின் சகோதரனும், அமரர் சுவாமிநாதன், ஸ்ரீனிவாசன், அமரர் சுந்தரமூர்த்தி, சக்குபாய், ராஜேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஜீவா கண்ணம்மா, வைத்திலிங்கம், அசோகன், ரமேஸ்ஆகியோரின் அன்புத்தந்தையும், அனுசியா, மாதவி, சுபதினி, ஆகியோரின் அன்பு மாமனாரும், பாலகந்தன், புவனா, அபிராமி, கந்தப்பா(பாபு), ஆம்ரபாலி (சோனா), சிவசங்கர், யதுசங்கரி ஆகியோரின் அன்பு பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

54(160) மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 -2223264 [C/5160]

தகவல்
க.வைத்திலிங்கம்
(மகன்)



## கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவன் திரு.T.குருபரன்
(HNDA 1ம் வருட மாலை நேர மாணவன்)
அவர்களின் அன்புத தந்தையார்

### அமரர் சரவணமுத்து தர்மகுலசிங்கம்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

HNDA 1ம் வருட மாலை நேர மாணவர்கள்,
உயர் தொழில்நுட்பகல்லூரி யாழ்ப்பாணம்.
[C/5159]


# வண்ணை சிவன் ஆலய தர்மகர்த்தா காலமானார்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வண்ணை வைத்தீஸ்வரன் ஆலய (வண்ணைச் சிவன் கோவில்) பரம்பரை உரிமையாளரும் தர்மகர்த்தாவுமான வைத்திலிங்கச்செட்டியார் கந்தப்பச்செட்டியார் நேற்று இந்தியாவில் தஞ்சாவூரில் காலமானார்.

கடந்த சில வருடங்களுக்கு முன்னர் இந்தியா சென்று அங்கு தங்கியிருந்த அவரின் விருபபபடி இந்த வருட ஆரம்பத்தில் வண்ணைச் சிவன் ஆலயத்தில் கும்பாபிஷேகம் நடைபெற்றதும் குறிப்பிடத்தக்கது (இ)

## மானுடத்தின்........

9மணி தொடக்கம் இரவு 8மணி வரை இடம் பெறுகின்றது.

இன்றைய இறுதிநாள் நிகழ்வில் விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் தலைவரும் தமிழ்நாடு சட்டசபை உறுப்பினருமான இரா. திருமாவளவன் சிறப்புரையாற்றுவார்.

கலைபண்பாட்டுக் கழகத் தலைவர் கவிஞர் புதுவை இரத்தினதுரை நிகழ்வை நிறைவு செய்யும் வகையில் நிறைவுரை யாற்றுவார்.

சிறப்புக்கலை நிகழ்வாக ''அருச்சுனன் பெற்ற பாசுபதம'' எனும் வடமோடிக் கூத்தும் இடம் பெறவுள்ளது.

## தனி அலகுக்கு........

எதிர்வரும் வியாழக்கிழமை அம்பாறை மாவட்டக் குழுவின் கூட்டம் ஒலுவிலில் நடைபெறும். பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ள எம்பிக்களுக்கு மாவட்டக் குழு முழு ஆதரவை தெரிவித்திருந்தது. பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ள நூர்தீன் மசூர் வேறு ஒரு அலுவலாக பாராளுமன்றத்துக்குச் சென்றவேளை பிரதமர் ரணில் அவரை அழைத்து சபையில் இருக்குமாறு கேட்டிருந்ததால் அன்று மட்டும் அங்கு பிரசன்னமாக இருக்க வேண்டியேற்பட்டிருந்தது. ஆனால் அவர் மீண்டும் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டிருக்கிறார்.

தன்னுடன் நூர்தீன் மசூர், மொஹிதீன் அப்துல் காதர், எச் எம்.எம்.ஹரிஸ், அன்வர் இஸ்மெயில், எம்.பீ.ஏ.அஸீஸ், றிசாட பதுர்தீன், எம்.எஸ்.தாபீக், கே. எம்.தாபீக் ஆகியோர் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளதாகவும் அதாவுல்ல தெரிவித்தார். இதேவேளை பஷீர் சேகுதாவூத், டாக்டர் ஹிப்ரத் ஆகிய இரு எம். பிக்களுமே ரவூப் ஹக்கீமுக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர். (ந)

## நோர்வே..........

நடவடிக்கைகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், சமாதான செயலணித் தலைவர் பேர்ணாட் குணதிலகா ஆகியோருடனான சந்திப்பை அடுத்து நேற்று இரவு அமைச்சர் ஹெல்கீஸன் தலைமையிலான விஷேட தூதுக் குழுவினர் பிரதமர் ரணில் விக்கிரம சிங்காவை அவரது வாசஸ்தலமான அலரிமாளிகையில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார்கள்.

இப் பேச்சுவார்த்தையின் போது இடம் பெயர்ந்த மக்களை மீளக் குடியமர, மீளக் குடியமர்த்துவது கண்ணிவெடிகளை அகற்றுதல், புனர்வாழ்வு, புனரமைப்பு வேலைகளை மேற் கொள்ளுதல் தொடர்பாகவும் சமாதானச் செயலணிக் குழு ஒருங்கிணைப்புக் குழுஅமைபபது தொடர்பாகவும் பேச்சுவார்த்தையின் போது பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

கிழக்குமாகாணத்தில் அம்பாறை, திருமலை ஆகிய மாவட்டங்களில் இடம் பெற்ற வன்முறைகள் ஆதனால் ஏற்பட்ட படு கொலைச்சம்பவங்கள் தொடர்பாகவும் பிரதமர் ரணில் விக்கிரம சிங்கா நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் தலைமையிலானகுழுவினருக்கு எடுத்துக் கூறியுள்ளார்.

கிழக்கு மாகாண சம்பவங்கள் சமாதான முயற்சிகளை பாதிக்குமா என்பது தொடர்பாகவும்விரிவாக ஆராயப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இம் மாதம் 31ம் திகதி நடை பெறவுள்ள இரண்டாம் கட்ட பேச்சு வார்த்தை தொடர்பான முக்கிய விடயங்கள் குறித்

ஜனாதிபதியுடன் நல்லுறவை ஏற்படுத்துமாறு

# அமைச்சர் ராஜிதவுக்கு அனுரா எம்.பி அழைப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி குமாரதுங்கவுடன் சமாதானஉறவை ஏற்படுத்தக் கொள்ள வருமாறு பொ.ஐ.முன்னணி கம்பஹா மாவட்ட எம்.பி அனுராபண்டாரநாயக்கா காணி அமைச்சர் ராஜித சேனாரத்தினவுக்கு அழைப்பு விடுத்துள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார். தொலை பேசி மூலம் தொடர்பு கொண்ட அனுரா பண்டார நாயக்கா பகைமையைக் கைவிடும் சந்தர்ப்பமாக இதனைக் கருத்தில் கொள்ளுமாறு கேட்டுள்ளார்.

முன்னர் ஜனாதிபதியை சந்திக்க அமைச்சர் கேட்டபோது, அவ்வாறான சந்திப்புக்கு அவசியமில்லை என்று ஜனாதிபதியின் ஊடகத்துறைப் பேச்சாளர் ஹரிம் பீரிஸ் கூறியிருந்தது, உள மட்டத்தில் தகவல் தொடர்புகள் நன்றாகப் பேணப்படாததனாலென்றும் அனுரா தெரிவித்துள்ளார்.

முன்னைய சந்திப்பை முன்னாள் அமைச்சரும் ராஜிதசேனாரத்தினவின் நண்பருமான ஜோன் அமரதுங்காவே, ஜனாதிபதி செயலகம் சந்திப்பை மறுத்ததனால் இனிமேலும் அவர்களே தொடர்புகளை ஆரம்பிக்க வேண்டுமென்றும் ராஜித கூறியுள்ளார்.

# எதிர்க்கட்சித் தலைவருடனும் விடார் ஹெல்கீசன் சந்திப்பு

(கொழும்பு)

கொழும்பு வந்திருந்த நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீசன் நேறறுக் காலை எதிர்க்கட்சித் தலைவர் மகி ந்த ராஜபக்ஷவை சந்தித்து பேச்சுவார்த்தை நடததியுள்ளார்.

இப்பேச்சு வார்த்தையின் போது அண்மையில் கிழக்கு மாகாணத்தில் அரச படைகள் மேற்கொண்ட படுகொலைகள் தொடர் பாகவும் ஆதனால் அங்கு எழுந்துள்ள பதற்ற நிலை தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டதுடன்,

கடந்த மாதம் தாய்லாந்தில் இடம் பெற்ற முதற் கட்ட சமாதானப் பேச்சு வார்த்தையின் போது கலந்துரையாடப்பட்ட விடயங்கள் தொடர்பாகவும்; அவற்றில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் தொடர்பாகவும் அமைச்சர் ஹெல்கீசன் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜ பக்ஷவுக்கு விளக்கிக் கூறியுள்ளார்.

இதனைத்தொடர்ந்து தாய்லாந்தில் இம் மாதம் 31ம்திகதி இடம்பெறவுள்ள இரண்டாம் கட்ட பேச்சு வார்த்தை தொடர்பாக எடுத்து ஆராயப்படவுள்ள முக்கிய அம்சங்கள் பற்றியும் இருவரும் கலந்துரையாடியுள்ளனர். (ம)

## பொதுத் தேர்தல்.....

சமரவீரவுடனும் ஜனாதிபதியுடனும் நெடுஞ்சாலை அமைச்சர் அதாவுல்ல பேச்சுக்கள் நடத்தியுள்ளதாகவும் திருமதி பேரியல் அஷ்ரப் தலைமையிலான ''நுஆ'' உறுப்பினர்கள் சிலர் எதிர்த்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை பாராளுமன்ற பகிஷ்கரிப்பில் தீவிரமாக ஈடுபட்டு வரும் அதாவுல்ல தலைமையிலான எம்.பிக்கள் ஆதரவுதராத விடத்து அரசாங்கத்தின் பெரும்பான்மை 114இலிருந்து109 ஆகிவிடும் என்ற நிலையில் இதுவே சமாதான செயறபாடுகளுக்கு தலையிடியாகி விடும என ராஜதந்திரிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இது இவ்வாறிருக்க இப்பொழுது ஒரு பொதுத்தேர்தல் நடைபெற்றால தாம் முன்னர் பெற்ற அதேயளவு ஆசனங்கள் மீண்டும் கிடைக்குமா என்பது சந்தேகமே என்று மாவட்ட அமைப்பாளர்களின் கூட்டத்தில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமும், சமாதான செயறபாடுகள் பொதுத் தேர்தலால் பின் தள்ளப்பட்டுவிடும் என்று தமிழ்க் கூட்டமைப்பு எம்.பி ஜோசப் பரராஜசிங்கமும் தெரிவித்துள்ளனர். (ந)

தும் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டிய விடயங்கள் குறித்தும் இடைக் கால நிர்வாக சபை அமைப்பது தொடர்பாகவும் பிரதமர் ரணிலும், அமைச்சர் ஹெல்கீஸனும் பேசியுள்ளனர்.

பிரதமர் ரணில் விக்கிரம சிங்கா நோர்வே அமைச்சர் குழுவினருக்கு நேற்ற இரவு இராப்போசன விருந்தளித்துக் கெளரவித்தார்.

பிரதமருடனானசந்திப்பை அடுத்து இன்று வன்னி சென்று அங்கிருந்து ஏ-9 கண்டி வீதியூடாக அமைச்சர் ஹெல்கீஸன் யாழ்ப்பாணம் வரவுள்ளார். (ம)

## யுத்தத்தால்........

தமிழ் சமூகங்களிடையே நடைபெற்றுக் கொண்டிருக்கும் பிரச்சினைகள் பொதுவாக இருசாராருக்கும் இடையே காணப்படும் தெளிவற்ற தன்மை காரணமாகவே நீடிக்கிறது.

அத்துடன் பிரச்சினைகள் குறித்து ஒழுங்கான முறையில் இருதரப்புக்கும் இடையில் வெளிபபடுத்தல்கள் நிகழவில்லை.

பொதுவாக சிங்கள மொழியில் தயாராகின்ற படங்களில் மிகச்சிலபடங்களே, தமிழ் சிங்கள சமூகத்தவரிடையேயான பிரச்சினைகளை கூறுவனவாக இருக்கின்றன.

சுவையும் கூட இப்பிரச்சினைகளை ஆழமாகக் கூறாமல் மேலெழுந்தவாரியாகவே வெளிப்படுத்துகின்றன.

இதனால் சிங்கள மக்கள் தமிழ் மக்களின் பிரச்சினைகளை புரிந்து கொள்ள முடியாமல் இருக்கின்றனர்.

இலங்கையின் வரலாற்றில் இரண்டு மிகப்பெரிய கலவரங்கள் ஏற்பட்டன. ஒன்று 1953ம் ஆண்டு நடைபெற்றது. மற்றைய கலவரம் 1983ல் இடம் பெற்றது.

இந்தக்கலவரங்களை மையமாகக் கொண்டு நான் ஒரு திரைப்படத்தை சிங்கள மொழியில் தயாரித்தேன்.

ஆனால் சிங்கள இனவாதிகள் அதனை தமிழர்கள் சார்பாக எடுக்கப்பட்ட படமென்று குறிப்பிட்டு அதனை கடுமையாக விமர்சித்தனர் என்றும் பேராசிரியர் சுனில் ஆரியரத்தினா மேலும் தெரிவித்தார். (இ)

## உயர் நீதிமன்ற.......

அரசியல் சூழ்நிலை தொடர்பாகவும், எடுக்கவுள்ள நடவடிக்கைகள் தொடர்பாகவும் நாளை புதன்கிழமை விளக்கிக் கூறவுள்ளார். (ம)


சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்ட சுத்தமானநல்லெண்ணெய்
V.S.P ஜஞ் ஓயில்
தயாரிப்பாளர்
[illegible]
26A, மானிப்பாய் வீதி, [C/4839] யாழ்ப்பாணம்.


இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.10.2002 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.